Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 39
கதிர் : 338

செவ்வாய்க்கிழமை
29 ஒக்ரோபர் 2024

ஐப்பசி 12
வள்ளுவர் ஆண்டு 2055

பக்கங்கள் – 16 | விலை – ரூபா 50




## மீண்டும் வந்தது 'யாழ்தேவி'

யாழ்ப்பாணம், ஒக். 29
கொழும்பு கோட்டையிலிருந்து யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வரையான ரயில் சேவை நேற்று முதல் மீண்டும் ஆரம்ப

15



# தேசத் துரோகிக்கே நாட்டில் உயர்பதவி

## இரண்டாம் அறிக்கையை வெளியிட்டு கம்மன்பில சரமாரியான குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக்ரோபர் 29

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் 'சனல் 4' வெளியிட்ட காணொலியில் முகத்தை மறைத்துக்கொண்டு, குரலையும் மாற்றிக்கொண்டு கருத்துகளை முன்வைத்த தேசத் துரோகியொருவருக்கே இந்த ஆட்சியின்கீழ் உயர் பதவியொன்று வழங்கப்பட்டுள்ளது – என்று பிவிருது ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில குற்றஞ்சாட்டியுள்ளார்.

15

## அமெரிக்கா இலங்கைக்கு பயணத்தடை விதிக்கவில்லை

### ஜூலி சங் விளக்கம்

கொழும்பு, ஒக். 29
இலங்கைக்கு எவ்வித பயணத் தடைகளும் விதிக்கவில்லை என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அமெரிக்காவின் இலங்கைக்கான தூதுவர் ஜூலி சங் மேலும் தெரி

15

## பொதுத் தேர்தலுக்கு 13,421 வாக்களிப்பு நிலையங்கள்

கொழும்பு, ஒக். 29
நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் வாக்களிப்பதற்கு 13 ஆயிரத்து 421 வாக்களிப்பு நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

15

**ஒற்றையாட்சியை நிராகரிக்கக்கூடிய ஒரே அணி த.தே.ம. முன்னணியே**
கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

**கீழ்த்தரமான அரசியலை செய்கிறார் அநுரகுமார**
சாடுகிறார் மணிவண்ணன்

**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை தலைமைச் சக்தியாக மாற்றுங்கள்**
சட்டத்தரணி சுகாஷ்

விரிவு - 2












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீழ்த்தரமான அரசியலை செய்கின்றார் அநுரகுமார

## சாடுகின்றார் மணிவண்ணன்

தன்னை ஊழலுக்கு எதிரான நேர்மையான அரசியல் வாதியாக வெளிக்காட்டிக்கொண்டு, மிகக் கீழ்த்தரமான அரசியலை ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க முன்னெடுக்கின்றார் என்று யாழ். தேர்தல் மாவட்டத்தில் தமிழ் மக்கள் கூட்டணியின் மான் சின்னத்தில் போட்டியிடும் சட்டத்தரணி வி. மணிவண்ணன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் ஆதரவாளர்கள் மீது கடந்த சனிக்கிழமை வன்முறைக் கும்பல் ஒன்று தாக்குதல் நடத்தியதில் மூவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு நேற்றுமுன்தினம் பொலிஸார் கைவிலங்கிட்டிருந்த நிலையில், அங்கு சென்று நிலைமைகளை ஆராய்ந்தபின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தாக்குதலில் காயமடைந்த நிலையில் சிகிச்சை பெறும் எங்கள் கட்சியின் ஆதரவாளர்களை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பொலிஸார் கைது செய்ய முயன்றுள்ளனர். கட்டிலுடன் கைவிலங்கிடப்பட்டுள்ள நிலையிலையே அவர்கள் சிகிச்சை பெறுகின்றனர். தாக்குதல் நடந்து 24 மணி நேரம் கடந்தும் தாக்குதலாளிகள் 30 பேரில் ஒருவரைக்கூடப் பொலிஸார் கைது செய்யவில்லை.

இந்தப் பின்னணியில் இந்தத் தாக்குதல் புலனாய்வாளர்களின் பங்களிப்புடன் நடந்ததாகவே சந்தேகிக்கின்றோம். தன்னை நேர்மையானவராக் காட்டிக் கொள்ளும் அநுரகுமார திஸாநாயக்க தனக்குக் கீழ் உள்ள பொலிஸ் திணைக்களம் ஊடாகக் கீழ்த்தரமான அரசியலை முன்னெடுக்கின்றார் என்பதற்கு இந்தச் சம்பவம் சான்றாக இருக்கின்றது.

தாக்குதலாளிகளுடன் பொலிஸார் நல்லுறவை பேணுகின்றனர் என்றும், அவர்களுடன் பொலிஸாரும் சேர்ந்து இயங்குகின்றனர் என்றும் நம்பகமாக அறிகின்றோம். இந்தத் தாக்குதலின் பின்னணியில் தமிழ் அரசியல் கட்சி ஒன்று உள்ளது என்றும் எமக்குத் தகவல் கிடைத்திருக்கின்றது - என்றார். (எ-20)

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை தலைமைச் சக்தியாக மாற்றுங்கள்!

## மக்களிடம் கோருகின்றார் சட்டத்தரணி சுகாஷ்

யாழ்ப்பாணம், ஒக்.29

வடக்கு-கிழக்கின் தலைமைச் சக்தியாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைத் தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளர் க. சுகாஷ் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றுத் திங்கட்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

புனிதமான மாவீரர் தின மாதமான நவம்பர் மாதத்தில் நடத்தப்படவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் சிந்தித்து வாக்களிக்கவேண்டும். மாவீரர்களினதும், போராளிகளினதும் தியாகங்களை மனதிலிருத்திச் சரியான தரப்பான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்குப் பெருவாரியான வாக்குகளை அளித்து வடக்கு, கிழக்கின் தலைமைச் சக்தியாகத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியைத் தமிழ்மக்கள் அங்கீகரிக்க வேண்டும்.

வடக்கு, கிழக்கில் குறைந்தபட்சம் பத்து ஆசனங்களாவது எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிக்குக் கிடைக்க வேண்டும். அப்போதுதான் எதிர்காலத்தில் தமிழினத்தை அழிவிலிருந்து காப்பாற்ற முடியும். ஈழத்தில் அரங்கேறிய இனப் படுகொலைக்குச் சர்வதேச விசாரணைகள் வாயிலாக நீதியைப் பெறுவதற்கான நடவடிக்கைகளையும், இலங்கையில் தமிழினத்தின் எதிர்கால இருப்புகளை நிலைநிறுத்தக் கூடிய நடவடிக்கைகளையும் முன்னெடுக்க முடியும் - என்றார். (எ-66)

# ஒற்றையாட்சியை நிராகரிக்கக்கூடிய ஒரே அணி த.தே.ம. முன்னணியே!

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிப்பு

**கொழும்பு, ஒக்.29**

**ஒற்றையாட்சி அரசமைப்பை நாங்கள் நிராகரிப்பதாக இருந்தால் அதை நிராகரிக்கக் கூடிய, செயற்படுத்தக்கூடிய ஓர் அணியாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உள்ளது என அந்தக் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.**

நேற்றுமுன்தினம் மன்னார் நகரசபை மண்டபத்தில் நடந்த வன்னி மாவட்ட வேட்பாளர் அறிமுகக்கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் இடம்பெற்ற போர் முடிவடைந்து 15 வருடங்கள் கடந்துள்ளன. இந்த 15 வருடங்களில் எமது மக்கள் பாதிக்கப்பட்டு உள்ளனர். வடக்கு - கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்கள் நாளாந்தம் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இவர்களின் ஒரு போராட்டத்திலாவது ஜே.வி.பி. கலந்து கொண்டுள்ளதா? வடக்கு - கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டம் இடம்பெற்று வருகின்றது. அரசியல் கைதிகளின் விடுதலைக்காக போராட்டம் இடம்பெற்று வருகின்றது. தனியார் காணிகள் அபகரிப்பு எதிராக பாதிக்கப்பட்ட எமது மக்கள் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இவற்றில் ஏதாவது ஒன்றிலாவது இந்த ஜே.வி.பி. தரப்பினர் அல்லது தேசிய மக்கள் சக்தி என கூறப்படுகிறவர்கள் கலந்து கொண்டுள்ளார்களா? இல்லை.

இலங்கையின் பிரதான அமைப்பாக அரசமைப்புப் காணப்படுகிறது. அந்த அரசமைப்பை மூன்று தடவை கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டுள்ளது. மூன்று அரசமைப்பையும் எமது மக்கள் நிராகரித்தனர். நாட்டின் பிரதான சட்டத்தை இரண்டாவது இனம் தொடர்ச்சியாக நிராகரித்து வருகிறது என்றால் அதற்கான அர்த்தம் அந்த இனத்திற்கு ஓர் இனப் பிரச்சினை உள்ளது என்பதேயாகும்.

ஒற்றையாட்சி அரசமைப்பு கொண்டு வரப்பட்டு, தமிழ் மக்கள் இந்த அரசமைப்பை ஆதரித்து விட்டார்கள் என்ற ஒரு செய்தியை காட்டுவதற்கு முயல்கின்றார்கள். இதுதான் எமக்கு இருக்கின்ற ஒரு மிகப்பெரிய சவால்- என்றார். (எ-இ)

# பெரும்போகத்துக்கான நீர் விநியோகம் ஆரம்பம்



கொழும்பு, ஒக்.29

மன்னார் மாவட்டத்தில் 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுக்கான பெரும்போக பயிர்ச்செய்கைக்கான முதலாவது நீர் விநியோகம் நேற்று வைபவ ரீதியாக ஆரம்பிக்கப்பட்டது.

பெரும் போகத்துக்கு 31 ஆயிரத்து 339 ஏக்கர் நிலப்பரப்பில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப் பட உள்ள நிலையில் தற்போது நீர் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வட மாகாணத்தில் 2ஆவது பெரிய குளமான முருகன் கட்டுக்கரை குளம் பெரிய உடைப்பு துருசு பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் சர்வ மத தலைவர்களின் ஆசியுடன் நீர் திறந்து விடப்பட்டது. மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் தலைமையில் நடந்த நிகழ்வில் நீர்ப்பாசன பணிப்பாளர், முருங்கன் கட்டுக்கரை குளம் நீர்ப்பாசன பொறியியலாளர், அரசாங்க திணைக்கள அதிகாரிகள் வாய்க்கால் அமைப்பு பிரதிநிதிகள், விவசாயிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ-58)

பாராளுமன்ற பொதுத் தேர்தல் -2024
(யாழ் - கிளிநொச்சி மாவட்டம்)

கடற்றொழில் மக்களுக்காக அயராது உழைக்கும்
ஈழ மக்கள் ஜனநாயக கட்சியையும்
அதன் செயலாளர் நாயகம்
கௌரவ டக்ளஸ் தேவானந்தா மற்றும்
கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன்
ஆகியோரை அதரித்து வெற்றிபெறச் செய்வோம்.

மத்தியில் கூட்டாட்சி. !
மாநிலத்தில் சுயாட்சி.!
உங்கள் முதன்மைத் தெரிவு
தோழர்
டக்ளஸ் தேவானந்தா
(ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின்
செயலாளர் நாயகம்)




ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் (ரங்கன்)
(கட்சியின் யாழ். மாவட்ட மேலதிக நிர்வாக செயலாளர், கட்சியின் ஊடகப்பேச்சாளர், பருத்தித்துறை பிரதேச சபை முன்னாள் தவிசாளர்)

X

X 1 2 3 4 5 6 7 8 9

உடுத்துறை 10ம் வட்டார கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்றத் தேர்தல் - 2024
ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி
(யாழ்.தேர்தல் மாவட்டம்)





**யாழ்.மண்ணிலிருந்து மக்களின் உணர்வாய் பாராளுமன்றில் பெண் குரல் ஒலிக்கட்டும்!**

**சசிகலா ரவிராஜ்** BSc.Dip.in.Edu



சங்கு சின்னத்தை தேர்ந்தெடுத்து
சசிகலா ரவிராஜிற்கு வாக்களியுங்கள்!

# பாராளுமன்றத் தேர்தல் 2024

**யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்**



**தேசத்தின் மீட்புக்காய் தேசியத் தலைவர் வழி நின்ற போராளிகளுக்கான அரசியல் அங்கீகாரம்!**

போராளி
**சி.வேந்தன்**



| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
|---|---|---|---|---|---|---|---|---|

**தாயகம் தேசியம் சுயநிர்ணயம்**
**ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி**

# நாடாளுமன்றத் தேர்தல் - 2024




**தமிழ்த் தேசியத்தின் கடைசி நம்பிக்கை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் எதிர்பார்ப்புகளுடன் இணைந்த தேசம் உருவாகும்

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.29
மக்களின் எதிர்பார்ப்புகளுடன் இணைந்த தேசத்தைக் கட்டியெழுப்பும் பயணம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

புவக்பிட்டியில் இடம்பெற்ற கூட்டமொன் றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-



நாட்டின் எதிர்காலம் எதிர்வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதி மக்களால் தீர்மானிக்கப்படும். நிறைவேற்று அதிகாரத்திலும் அரசியல் கலாசாரத்திலும் தேவையான மாற்றங்களை முறையாக நடைமுறைப்படுத்த அரசாங்கம் உறுதியாகச் செயற்படும். அரசாங்கம் மக்களிடையே வெளிப்படைத்தன்மை மற்றும் நேர்மை மூலம் நம்பிக்கையை வளர்ப்பதில் கவனம் செலுத்துகிறது. எங்களிடம் நிறைவேற்று அதிகாரம் மாத்திரமே உள்ளது. அதனைக் கொண்டு உலகின் மிகச் சிறிய அமைச்சரவையை நாம் கொண்டு நடத்துகிறோம்.

நிறைவேற்று அதிகாரத்தைச் சுத்தப்படுத்தி ஜனநாயக சக்தியாக மாற்றுவதே தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட முதலாவது நடவடிக்கை - என்றார். (எ-இ)


### மணிக்கூடுகள் விலைக்கு வாங்கப்படும்

ROLEX, Omega மற்றும்
பழைய கால மணிக்கூடுகள்
வாங்கப்படும்.
மரத்தினாலான Clock களும்
இடம்: யாழ். மத்திய பஸ் நிலையம் அருகில்
தொடர்புகளுக்கு:
076 697 7346



### வீடு வாடகைக்கு

யாழ் நகர் வைமன் வீதியில் அமைந்துள்ள
மாடி வீடு வாடகைக்கு உண்டு.
வாடகை : 45,000/- , 6 மாத முற்பணம்,
தரகர் தேவையில்லை.
தொடர்பு:- 077 541 7464


### வலிகாமம் வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள்,கருவாட்டுக்கடைகள் என்பன குத்தகைக்கு / வாடகைக்கு விடுவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் 2025

| | |
|---|---|
| கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித்திகதி | :- 12.11.2024 செவ்வாய்க்கிழமை ந.ப 12.00 மணிவரை |
| கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி | :- 12.11.2024 செவ்வாய்க்கிழமை பி.ப 02.00 மணிவரை |
| கேள்விகள் திறக்கப்படும் திகதி | :- 12.11.2024 செவ்வாய்க்கிழமை பி.ப 2.30 மணி |

| இல | குத்தகைவிபரம் | மாத வாடகை | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்க முடியாதது |
|---|---|---|---|---|---|
| மல்லாகம் உப அலுவலகம் | | | | | |
| 01 | அளவெட்டி மலைவேம்படிச் சந்தை | - | 53,300.00 | 1,000.00 | 1,500.00 |
| 02 | அளவெட்டி மலைவேம்படி கோழிக்கடை இல – 06 | 1,500.00 | 57,600.00 | 1,000.00 | 1,500.00 |
| 03 | அளவெட்டி மலைவேம்படி மாட்டிறைச்சிக்கடை இல – 07 | 1,500.00 | 380,000.00 | 5,000.00 | 1,500.00 |
| 04 | அளவெட்டி மலைவேம்படி பன்றிறைச்சிக் கடை | 1,000.00 | 190,000.00 | 1,000.00 | 1,500.00 |
| 05 | மல்லாகம் பொதுச்சந்தை | …… | 115,150.00 | 1,000.00 | 1,500.00 |
| 06 | மல்லாகம் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 2,750.00 | 847,700.00 | 10,000.00 | 1,500.00 |
| 07 | மல்லாகம் பொதுச்சந்தை கோழிக்கடை | 2,750.00 | 556,350.00 | 10,000.00 | 1,500.00 |
| 08 | இறால்மடம் சந்தை | ……… | 31,350.00 | 1,000.00 | 1,500.00 |
| 09 | இறால்மடம் சந்தை கோழிக்கடை | 1,250.00 | 29,250.00 | 1,000.00 | 1,500.00 |
| 10 | இறால்மடம் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 1,250.00 | 597,400.00 | 10,000.00 | 1,500.00 |
| 11 | கும்பலை சந்தைக்குள் அமைந்துள்ள மாட்டிறைச்சிக்கடை இல 01 | 2,000.00 | 723,300.00 | 10,000.00 | 1,500.00 |
| 12 | கணேஸ்வரம் சந்தை | ……… | 65,850.00 | 1,000.00 | 1,500.00 |
| 13 | கணேஸ்வரம் சந்தைகோழிக் கடை | 1,000.00 | 58,600.00 | 1,000.00 | 1,500.00 |
| தெல்லிப்பளை உப அலுவலகம் | | | | | |
| 01 | கூத்தன்சீமாச் சந்தைகோழிக் கடை | 1,050.00 | 80,500.00 | 1,000.00 | 1,500.00 |
| 02 | கூத்தன்சீமாச் சந்தைகருவாட்டுக்கடை | 1,050.00 | 15,700.00 | 1,000.00 | 1,500.00 |
| 03 | கீரிமலை மரக்கறிச்சந்தை | ……… | 28,200.00 | 1,000.00 | 1,500.00 |
| 04 | வீமன்காமம் பொதுச்சந்தை கோழிக்கடை | 1,050.00 | 1,423,850.00 | 10,000.00 | 1,500.00 |
| 05 | வீமன்காமம் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,050.00 | 564,400.00 | 5,000.00 | 1,500.00 |
| 06 | வீமன்காமம் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 1,050.00 | 20,900.00 | 1,000.00 | 1,500.00 |
| 07 | வீமன்காமம் பொதுச்சந்தை கருவாட்டுக்கடை | 1,050.00 | 15,200.00 | 1,000.00 | 1,500.00 |
| மயிலிட்டி உப அலுவலகம் | | | | | |
| 01 | குரும்பசிட்டி சந்தை | ………. | 12,550.00 | 1,000.00 | 1,500.00 |
| காங்கேசன்துறை உப அலுவலகம் | | | | | |
| 01 | காங்கேசன்துறை பொதுச்சந்தை | ………. | 73,250.00 | 1,000.00 | 1,500.00 |
| 02 | காங்கேசன்துறை சந்தை கோழிக்கடை | 1,200.00 | 81,200.00 | 1,000.00 | 1,500.00 |
| 03 | காங்கேசன்துறை சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,200.00 | 73,350.00 | 1,000.00 | 1,500.00 |
| 04 | காங்கேசன்துறை சந்தை கருவாட்டுக்கடை இல.1 | 1,200.00 | 62,700.00 | 1,000.00 | 1,500.00 |
| 05 | காங்கேசன்துறை சந்தை கருவாட்டுக்கடை இல.2 | 1,200.00 | 55,700.00 | 1,000.00 | 1,500.00 |

குறிப்பு :

மேலதிக விபரங்களை அறிந்துகொள்ள 09.10.2024 திகதிய உதயன்,தினக்குரல் பத்திரிகையில் பார்வையிடவும் அல்லது பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேரடியாகவோ அல்லது 0212241130 தொலைபேசி ,லக்கத்தின் ஊடாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

திரு.சு.சுதர்ஜன்
உள்ளூர் அதிகார பெறுகைச்சபை
வலிகாமம் வடக்குப்பிரதேச சபை- காங்கேசன்துறை

29.10.2024

(CR/35514) J-1

### அந்தியேட்டி வீட்டுக்கிருத்தி அழைப்பு



கடந்த 29.09.2024 ஞாயிற்றுக்கிழமை
சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

**அமரர்**
**சிவபாக்கியம் சின்னத்தம்பி**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (29.10.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி தெற்கு,
கைதடி.

குடும்பத்தினர்

(cr 43501) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










# கொடுக்குளாய் - இயக்கச்சி; அபாயவெளிப் பாதை மூடல்

வடமராட்சி கிழக்கு கொடுக்குளாய் இயக்கச்சி அபாயவெளிப்பாதை திருத்த வேலைகள் காரணமாக இன்று செவ்வாய்க்கிழமையும், நாளை புதன்கிழமையும் இரண்டு தினங்கள் மூடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால், மாற்றுவழி வீதிகளைப் பயன்படுத்துமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

இந்த வீதி தற்போது பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படும் நிலையில் வீதியிலுள்ள குழிகளைக் கிரவல் கொண்டு திருத்தம் செய்வதற்கான நடவடிக்கை கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஆரம்பமாகி முன்னெடுக்கப்பட்டிருந்தது. கடும் மழையால் வீதியின் திருத்தப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது.

இந் நிலையில் இன்றும், நாளையும் குறித்த வீதியை மூடித் திருத்தம் செய்யும் பணியில் ஈடுபடவுள்ளதாக உடுத்துறைக் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் கணேஸ்வரன் தெரிவித்தார். கையிருப்பிலுள்ள சிறுநிதியைக் கொண்டு இப் பணிகள் முன்னெடுக்கப்படும் நிலையில் உதவ இயலுமான அனைவரும் இந்தப்பணிக்கு உதவ முன்வரவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். அத்துடன் வடமராட்சி கிழக்கு மக்களின் உயிர்க் கேடயமாகக் காணப்படும் குறித்த வீதியைப் புனரமைப்புச் செய்வது தொடர்பில் அரசியல்வாதிகளும், அரசாங்க அதிகாரிகளும் கவனம் செலுத்த வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றுநோய் உயிரிழப்பு இலங்கையில் அதிகரிப்பு

**கொழும்பு, ஒக்.29**

**இலங்கையில் புற்றுநோயால் மரணிப்பவர்களின் எண்ணிக்கை வருடமொன்றுக்கு சராசரியாக 19 ஆயிரத்துக்கும் அதிகம் என்று சுகாதார அமைச்சுத் தெரிவித்துள்ளது.**

சுகாதார அமைச்சின் அறிக்கைகளுக்கு அமைவாக பெண்களுக்கு மார்பகப் புற்று நோயும், ஆண்களுக்கு வாய்ப் புற்று நோயும், குழந்தைகளுக்கு இரத்தப் புற்று நோய், நிணநீர்க் குழாய் புற்றுநோய், மூளைப் புற்று நோய், எலும்புப் புற்றுநோய் போன்றன ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன என்று தெரியவந்துள்ளது. இலங்கையில் ஒவ்வொரு வருடமும் 35 ஆயிரம் முதல் 40 ஆயிரம்வரை புதிதாக புற்றுநோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-45)

## வாய்க்கால் மூடப்பட்டதால் போக்குவரத்தில் இடர்பாடு!

கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட உழவனூர் கிராமத்திலுள்ள 30க்கும் மேற்பட்ட குடும்பங்கள் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாத நிலையில் காணப்படுகின்றனர். நாளாந்தம் பயன்படுத்தும் பிரதான பாதை அருகே உள்ள கழிவு வாய்க்கால் மூடப்பட்டுள்ளதும், அத்துமீறி நெற்செய்கையில் ஈடுபட்டு வருவதும் இதற்குக் காரணம் என பிரதேச மக்கள் தெரிவித்தனர். இது தொடர்பாக புளியம்பொக்கணை கமநல சேவை திணைக்களம் மற்றும் கிராம சேவையாளர்களுக்கு தெரியப்படுத்தி எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளை இதற்கான நடவடிக்கையை எடுத்துத் தருமாறும் பொதுமக்கள் கேட்டுள்ளனர். (ரி-113)

# தமிழர் மீது தீராப்பகை கொண்ட ஜே.வி.பி.யை ஆதரிப்பது மடமை

## ஐங்கரநேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.29

ஜே.வி.பி.யினர் தங்களை மார்க்சியவாதிகளாகக் காட்டிக்கொண்டு பௌத்த சிங்கள பேரினவாத நிகழ்ச்சி நிரலையே முன்னெடுத்து வருகின்றனர். தமிழர்கள் மீது தீராப்பகை கொண்ட ஜே.வி.பி.யை தமிழ் மக்களே ஆதரிப்பது அரசியல் மடைமைத்தனமாகும்.

இவ்வாறு சனநாயகத் தமிழரசுக் கூட்டணியின் நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார். கோண்டாவில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இனங்களுக்கிடையே கலைஞர்களின் ஊடாக நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் 2003ஆம் ஆண்டு கொழும்பு நகர மண்டபத்தில் தமிழ், சிங்கள கலை இலக்கியவாதிகள் இணைந்து கலைக்கூடல் நிகழ்ச்சியை நடத்தினர். அதை ஏற்பாடு செய்தவர்களில் நானும் ஒருவன். இன நல்லிணக்கத்தைப் பொறுக்க முடியாத ஜே.வி.பி.யினர் புத்த பிக்குகள் சகிதம் வந்து தாக்குதல் நடத்தினார்கள். தமிழர்கள்மீது தீராப்பகை கொண்ட ஜே.வி.பி.யை தமிழ் மக்களே ஆதரிப்பது அரசியல் மடைமைத்தனமாகும்

தமிழர்களின் தாயகமான வடக்கு - கிழக்கை நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் துண்டாடியவர்கள் இவர்கள்தான். விடுதலைப் புலிகளை அழித்ததில் அமெரிக்காவின் பங்களிப்புக்காக அமெரிக்கத் தூதரகம் சென்று கைகுலுக்கியவர்களும் இவர்கள்தான். அமைச்சர் பதவிக்காகத் தமிழ் மக்களை ஜே.வி.பியிடம் அடகு வைப்பதற்கும் சிலர் தயாராக இருக்கிறார்கள். தமிழ் மக்கள் இதனைப் புரிந்துகொண்டு ஜே.வி.பி.யை வடக்கு - கிழக்கில் முற்றாக நிராகரிக்க வேண்டும் - என்றார். (எ-27)

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 23 | 27 |
| 05 | 10 |
| 1932 | 2024 |

திருமதி

## ராஜமணி தேவபாலசுந்தரம் (மணி ரீச்சர்)

**இளைப்பாறிய அதிபர் - யாழ் / கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்**

மலேசியாவை பிறப்பிடமாகவும் கைதடி மற்றும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி ராஜமணி தேவபாலசுந்தரம் அவர்கள் 27.10.2024 ஞாயிற்றுக்கிழமையன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திரசேகரர் பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நாகலிங்கம் பரஞ்சோதி தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தேவபாலசுந்தரம் (முன்னாள் யாழ். மாநகரசபை உறுப்பினர், மாவட்ட விளையாட்டு அதிகாரி, ஆசிரியர் - திருநெல்வேலி பரமேஸ்வரா கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும் தேவநேசன் (மணிவண்ணன்) அவர்களின் அன்புத்தாயாரும் தர்ஷினியின் அன்பு மாமியாரும் தேவக்ருத்திக், அஷ்மிதா ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் சுப்பிரமணியம் , நவரத்தினம் மற்றும் காலஞ்சென்றவர்களான தெய்வநாயகி, அன்னபாக்கியம், சிவபாக்கியம், இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் தர்மராஜா சரஸ்வதி தம்பதியினரின் அன்புச் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 29.10.2024 இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணிமுதல் இரவு 7.00 மணிவரையும் 30.10.2024 நாளை புதன்கிழமை காலை 8.00 மணிமுதல் பிற்பகல் 1.00 மணிவரையும் அஞ்சலிக்காக பொரளை ஜெயரத்ன மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு அதனை தொடர்ந்து இறுதிக்கிரியைகள் ஆரம்பமாகி மாலை 3.00 மணியளவில் தகனத்திற்காக பொரளை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் : தேவநேசன் (மகன்)**
**+94717909864 / +61469851413**

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 07 | 28 |
| 08 | 10 |
| 1944 | 2024 |

## இராசலிங்கம் இந்திராணி

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசலிங்கம் இந்திராணி கடந்த 28.102024 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் முத்துப்பிள்ளை தம்பதியினரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற துரையப்பா இராசலிங்கத்தின் அன்பு மனைவியும், தனபாலசிங்கம், பூபாலசிங்கம், குணபாலசிங்கம், ஆகியோரின் அன்புச் சகோதரியும் நிமேஷ் கண்ணா, விவேகானந்-விமலினி, நித்தியானந்-கிருஷ்ணா, கிருசாந்தி-குலதீபன், கேதாரகௌரி- பரமேஸ்வரன், சுகந்தி-யசிந்தகுமார், பிரதீபா-முரளி, பிருந்தா-ததிஸ்கரன், பாலிகா-நிமலன், அபிகன், உமாஜிகன், இன்பநேசன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.10.2024) செவ்வாய்க் கிழமை காலை 12.00 மணியளவில் ஐங்கரன் வீதி, சுதுமலை தெற்கு என்னும் முகவரியில் அமைந்துள்ள மருமகனின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரிகைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**ஐங்கரன் வீதி,**
**சுதுமலை தெற்கு**
**மானிப்பாய்.**

(CS 1741) P-1

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 297 3589**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# வாக்குகளில் அமிழும் தமிழ்த்தேசியம்

பொதுத்தேர்தலுக்கான பரப்புரைகள் தமிழர் தாயகத்தில் தற்போது உச்சம் பெற்றிருக்கின்றன. வழக்கமான நீயா? நானா? பிடுங்குப்பாடுகள், சேறு பூசல்கள், அடிதடிகள், மிரட்டல்கள், தேர்தல் வன்முறைகள், தேர்தல் விதிமீறில்கள் என தேர்தல் பதற்றம் தாயகத்தைச் சூழ்ந்திருக்கின்றது. 'தமிழ்த் தேசியம்' என்ற கோட்பாட்டை மையப்படுத்தித்தான் அனேக தரப்புகள் தமிழர் பகுதிகளில் தமது தேர்தல் பரப்புரைகளைக் கட்டமைத்து வருகின்றன. அதென்ன தமிழ்த் தேசியம்? தேர்தல் காலத்தில் மட்டும் எதற்காக அது பேசுபொருளாகின்றது? என்ற கேள்விகளுக்கான பதிலை நாம் தேட வேண்டியிருக்கின்றது. தமிழர்களுக்கான தேசத்தை அனைத்து வழிகளிலும் இறுகக் கட்டமைக்கும் ஓர் உன்னத எண்ணப்பாடே 'உண்மையான' தமிழ்த் தேசியம். ஆதலால், தமிழ்த் தேசியம் என்பதை சிங்கள - பௌத்த பேரினவாத சித்தாந்தத்துக்கு எதிரான செயற்றிட்டம் என்ற வரையறைக்குள் மட்டுப்படுத்திவிட முடியாது. சிங்கள - பௌத்தத்தை எதிர்த்தால் அவர் தமிழ்த் தேசியவாதி என்ற மிகக் குறுகிய மனோநிலைக்குள் நாம் பழக்கப் பட்டுவிட்டோம். ஆதலால்தான், தமிழ்த் தேசியம் என்பது இன்று தேர்தல் காலத்தில் மட்டுமே பேசுபொருளாகின்றது. தேர்தல் முடிந்த கையுடன் அது தேடுவாரற்றுத் தெருவில் விடப்படுகின்றது.

தேசியத் தலைவர் ஒருபோதும் தன் தமிழ்த் தேசிய உணர்வை தேர்தலுடன் மட்டுப்படுத்தியிருக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால், அவர் அதை ஆயுதங்களுடன்கூட மட்டுப்படுத்தியிருக்கவில்லை. இனத்தின் இறைமையை - வேணவாவை - அபிலாஷைகளை விட்டுக்கொடுக்காததும், இனத்தின் இருப்பை உறுதிப்படுத்தக்கூடியதுமான அத்தனை நகர்வுகளும் தமிழ்த் தேசியம்தான். இன்று, தமிழ்த் தேசியம் என அன்றாடம் முழங்கிக் கொண்டிருக்கும் அரசியல் பிரதிநிதிகளில் எத்தனைபேர், தமிழ்த் தேசியத்துக்கு தகுந்த அர்த்தம் கற்பித்திருக்கின்றனர்? எத்தனை பேர் தேர்தலுக்கு அப்பாற்பட்டு தமிழ்த் தேசியத்துக்காகப் பாடுபட்டிருக்கின்றனர்.

தமிழ்த் தேசியத்தை அதன் இருப்பை உறுதிப்படுத்தவும் ஆயிரமாயிரம் வழிகள் உள்ளன. அவற்றில் ஒன்றுதான் தேர்தலும் அதிகாரமுமே தவிர, அது ஒன்றுதான் வழியென்று பரப்புரைகளை மேற்கொள்வதும், மக்களை மந்தைகளாக வழிநடத்திச் செல்வதும் அபத்தம். 'இயற்கை என் நண்பன். வரலாறு என் வழிகாட்டி. வாழ்க்கை எனது தத்துவாசிரியன்' என்றார் தேசியத் தலைவர். அவர் வழியில் சொல்லப் போனால், இன்று தாயக நிலத்தின் பேணுகைக்காக மரங்கள் நாட்டப்படுகின்றதே, அதுவும் தமிழ்த் தேசியம்தான். ஆக, தேர்தலுக்குள்ளும் வாக்குகளுக்குள்ளும் தேசியத்தை தேடாதீர்கள். அது தேசியத்தை மலினப்படுத்திவிடும். சிங்கள - பௌத்த பேரினவாதத்தை நேரெதிர்த்து நிற்பதுதான் தமிழ்த் தேசியம் என்றெண்ணாதீர்கள். அது தமிழ்த் தேசியத்தின் பாதையை குறுகச் செய்யும். எம் இனத்தின் இருப்பை, அபிலாஷைகளை இம்மியும் விட்டுக்கொடுக்காத அத்தனை நகர்வும் தமிழ்த் தேசியமே. அத்தகைய நடவடிக்கைகளே இன்றைய காலத்தேவை.



# உத்தியோகபூர்வ இல்லங்களை கையளிக்க தயங்கும் 14 பேர்!

**கொழும்பு, ஒக்.29**

**முன்னாள் அமைச்சர்கள் 14 பேர் தங்களுக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்களை மீளக் கையளிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.**

அவர்களில் நல்லாட்சி அரசாங்கத்தின் போது முன்னாள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஆர்.சம்பந்தன் மற்றும் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச ஆகியோரின் பெயர்களும் உள்ளடங்கியுள்ளன. வாகன விபத்தில் உயிரிழந்த முன்னாள் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த பயன்படுத்திய உத்தியோகபூர்வ இல்லம் இதுவரை கையளிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுத்தேர்தலுக்கு முன்னர் உத்தியோகபூர்வ இல்லங்களை ஒப்படைக்க வேண்டும் என்று அரசாங்கம் அறிவித்திருந்தது.

ஆயினும் முன்னாள் அமைச்சர்கள் 14 பேர் இதுவரை தமது உத்தியோகபூர்வ இல்லங்களை ஒப்படைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகள் இரத்தாகும்

## அநுரகுமார திட்டவட்டம்



கொழும்பு, ஒக்.29

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட சிறப்புரிமைகள் சலுகைகள் நிச்சயமாக இரத்து செய்யப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். முன்னாள் ஜனாதிபதிகளை பராமரிப்பது, கவனித்துக்கொள்வது மக்களின் வேலையில்லை எனத் தெரிவித்துள்ள அவர் சுற்றறிகைகள், நாடாளுமன்ற சட்டங்கள் அரசமைப்பு ஏற்பாடுகளின் அடிப்படையிலேயே முன்னாள் ஜனாதிபதிகளுக்கு விசேட சலுகைகள் சிறப்புரிமைகள் வழங்கப்படுகின்றன என்றும் தெரிவித்துள்ளார். அந்த சுற்றறிக்கைகள், சட்டங்களில் மாற்றங்களை கொண்டுவருவது தொடர்பாகக் கவனம் செலுத்தியுள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# வாகன இறக்குமதி தீர்மானத்தில் மாற்றம்

வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதி வழங்கும் நடவடிக்கை பிற்போடப்பட்டுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது. அடுத்த ஆண்டு ஜனவரி முதல் வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது இந்தத் தீர்மானத்தில் மாற்றம் ஏற்படுத்தப் பட்டுள்ளது என்று தெரிய வருகின்றது. (எ-இ)

# ரயில் தடம்புரள்வு

கொழும்பு, ஒக்.29

பாணந்துறையில் இருந்து மருதானை நோக்கிப் பயணித்த ரயில் கொம்பைத்தீவு ரயில் நிலையத்துக்கு அருகில் தடம்புரண்டுள்ளது. இதனால் கரையோர மார்க்க ரயில் சேவைகள் நேற்றுத் தடைப் பட்டன என்று ரயில்வே திணைக் களம் தெரிவித்துள்ளது. (எ-இ)

# அரிசி, நெல் கையிருப்பு அறிக்கை ஜனாதிபதியிடம்

கொழும்பு, ஒக்.29

நாட்டில் உள்ள அரிசி மற்றும் நெல் கையிருப்பு தொடர்பில் நுகர்வோர் அதிகார சபையால் தயாரிக்கப்பட்ட அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில், அநுராதபுரம், பொலன்னறுவை, அம்பாறை மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் உள்ள அரிசி மற்றும் நெல் கையிருப்பு அளவுகளைப் பெற்றுக்கொள்ள நுகர்வோர் அதிகார சபை நடவடிக்கை எடுத்திருந்தது. (எ-இ)

## நாளை

30.10.2024

புதன்கிழமை - ஐப்பசி - 13

சுபநேரம் : 04.33 - 06.03

ராகுகாலம் : 12.03 -01.33

## நாளொரு நல்வார்த்தை

முயற்சி என்பது ஒரு தடாகம். அதில் நீந்தி கரை சேரும்போது ஏற்படுவது போன்ற இன்பம் உலகத்தின் வேறு எந்த ஒன்றிலும் கிட்டுவதில்லை.

- ஷேக்ஸ்பியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



தோற்றம் 10 . 01 . 1947 — மறைவு 27 . 10 . 2024

### காங்கேசு இளங்கோவன்

யாழ்ப்பாணம் சங்கானை, தேவாலய வீதியைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட காங்கேசு இளங்கோவன் கடந்த 27.10.2024 லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காங்கேசு - இராசமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், கங்காதேவியின் பாசமிகு கணவரும், செந்தூரனின் அன்புத் தந்தையும், விபூசா, கிசோன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற இரத்தினசபாபதி (வவுனியா), சபாநாதன் (சண்டிலிப்பாய்), காலஞ்சென்ற பாலசுந்தரம், பாலகிருஷ்ணன் (சங்கானை), காலஞ்சென்ற சகுந்தலாதேவி, ரூபராணி (ஜேர்மனி), பரமேஸ்வரி (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற குணநாயகி, விமலா, புவனேஸ்வரி, சிவனேஸ்வரி, காலஞ்சென்ற இராசலிங்கம், செல்வநாயகம் (ஜேர்மனி), காலஞ்சென்ற நாகராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் லண்டனில் அமைந்துள்ள 170, சென்ரல் Road மெடோன் சூரி S.M.456Q London னில் அன்னாரின் இறுதிக்கிரியைகள் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**முருகமூர்த்தி வீதி,**
**சங்கானை.**

**தகவல்:**
**கா.பாலகிருஷ்ணன்**
**021 2251195**

(cs.56555) N-1)

## மரண அறிவித்தல்



பிறப்பு 29 . 12 . 1937 — இறப்பு 27 . 10 . 2024

### சரவணை கந்தையா

பாலாவோடை களபூமியைப் பிறப்பிடமாகவும் சடையாளி வைரவர் கோயில் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணை கந்தையா நேற்று முன்தினம் (27.10.2024) ஞாயிற்றுக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணை - சீதேவி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும், தேவதாஸ், மோகனாம்பாள், சிவயோகேஸ்வரி, சரோஜாதேவி, முருகானந்ததாஸ், காலஞ்சென்ற கிருஸ்ணதாஸ், கஜனதாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகரட்ணம், சரோஜினிதேவி, அருணகிரிநாதர், சிவரஞ்சிதன், தேவகுஞ்சரி, கவிதா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

**அன்னாரின் இறுதிகிரியைகள் பற்றி விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.**

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தலையாழி வைரவர் கோயிலடி,**
**கொக்குவில்.**

**தகவல்:**
**பிள்ளைகள்**
**077 055 4083**
**021 221 5856**

(cs.56558) N-1)

## முட்டை விலையில் சரிவு



கொழும்பு, ஒக். 29

கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் உள்ளூர் சந்தையில் முட்டையின் விலை குறைந்துள்ளது என்று கூறப்படுகின்றது. அகில இலங்கை முட்டை வியாபாரிகள் சங்கத்தின் அறிக்கையின்படி சந்தையில் நேற்று சிவப்பு முட்டை ஒன்றின் விலை 36 ரூபா என்றும், வெள்ளை முட்டை ஒன்றின் விலை 35 ரூபா என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வாரம் சிவப்பு மற்றும் வெள்ளை முட்டை ஒன்றின் விலை முறையே 42 ரூபா மற்றும் 41 ரூபாவாகக் காணப்பட்டது. (எ-இ)

### வீடு வாடகைக்கு

இல.25/19, ஓடை ஒழுங்கை,
வண்ணார்பண்ணையில் சிறிய வீடு
(2 பேர் உள்ளவர்களுக்கு மட்டும்)
வாடகைக்குண்டு. (கொமேட் இல்லை)

**077 244 5706**

(cs 56556) (N-1)

### வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள
PPT எனும் நிறுவனத்திற்கு
வேலையாட்கள் தேவை.

- **முகாமையாளர்**
- **காசாளர்**
- **அலுவலக உதவியாளர்**
- **பேருந்து நடத்துநர்**

**077 386 6250, 077 573 1318**

(CS/56559) J-1

# ஓராண்டு நினைவஞ்சலி



### அமரர் திருமதி
## நாகேசு அன்னலெட்சுமி

எம் இதயங்களில் ஒளி வீசிய பூரண நிலவே - எம்
கண்களில் நீர் வரவழைத்தே மறைந்ததேனோ!
- எம் அருமைத் தெய்வமே!
வாழ்வே மாயமென்று எமக்கு உணர்த்தி விட்டுச்
- சென்றனையோ
பூரண வாழ்வை வாழ்ந்து முடித்து விட்டேன் என்று
பூரண நிம்மதியுடன் எம்மைத் தவிக்கவிட்டு
- சென்றனையோ!
ஆண்டவன் அடியில் அகல் விளக்காகி
ஆண்டு ஒன்றாகி அவனியை நீத்து
ஒன்றென்ன பல நூறு ஆண்டுகளே ஆனாலும்
நித்திரையிலும் நினைவகலா நித்திலமே!
எங்கள் வாழ்வின் எல்லை வரை தெய்வமாய் இருந்து
எம்மை என்றும் காத்திடுங்கள்.....

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை**
**பிரார்த்திக்கின்றோம்.**

மண்ணில் 15.05.1938 — விண்ணில் 11.11.2023

இல.90,
நல்லூர் குறுக்கு வீதி,
நல்லூர்

குடும்பத்தினர்

CS 56557) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நினைவு தினமும் பரிசளிப்பும்

யாழ். தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் ஏற்பாட்டில் நவமகாஜனச் சிற்பி தெ.து. ஜயரத்தினம் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் அதிபர் இ. புஸ்பரட்ணம் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

சிங்கப்பூரைச் சேர்ந்த தகவல் தொழில்நுட்ப வல்லுநர் தி. கணேசலிங்கம் நினைவுப் பேருரை ஆற்றுவார். நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீடக் கணிதமும் புள்ளிவிவரவியலும் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ. லகீதரனும், சிறப்பு விருந்தினராக யாழ். சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் ஆசிரியர் திருமதி சோபனா லகீதரனும், கௌரவ விருந்தினராக தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வே. அரசகேசரியும் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-25,66)

# இலக்கத்தகடற்ற கார் எங்களுடையது அல்ல

## லொகான் ரத்வத்தை மறுப்பு

கொழும்பு, ஒக்.29

மிரிஹானவில் இலக்கத்தகடு அற்ற நிலையில் மீட்கப்பட்ட கார் தனது மனைவிக்கு சொந்தமானது என தெரிவிக்கப்படுவதை முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொகான் ரத்வத்தை நிராகரித்துள்ளார்.

அண்மையில் கண்டியில் தற்கொலை செய்து கொண்ட தனது செயலாளரே அந்தக் காரை இலங்கைக்கு கொண்டுவந்தார் என முன்னாள் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். தற்கொலை செய்துகொண்ட நபர் எனக்கு தெரியாமல் அந்த வாகனத்தை இலங்கைக்கு கொண்டு வந்தார் என முன்னாள் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். எனக்கு வாகனத்தின் உரிமையாளரை தெரியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

# வடமராட்சி கிழக்கில் வேந்தன் பரப்புரை

யாழ்ப்பாணம், ஒக்.29

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட வேட்பாளரும் ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவருமான சி. வேந்தன் நேற்றுமுன்தினம் வடமராட்சி கிழக்கில் தேர்தல் பரப்புரைகளை மேற்கொண்டார்.

மக்களைச் சந்தித்து அவர்களின் தேவைகளைக் கேட்டறிந்ததுடன், நாடாளுமன்றத்துக்குப் புதிய முகங்களின் தேவையை வலியுறுத்தி தேர்தல் பரப்புரைகளை மேற்கொண்டார். (எ-27)




# கடவுச்சீட்டுக்கு மீண்டும் வரிசை

கொழும்பு, ஒக்.29

பத்திரமுல்லவில் உள்ள குடியவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் தலைமை அலுவலகம் முன்பாக மீண்டும் கடவுச்சீட்டுக்காக நீண்ட வரிசை காணப்படுகின்றது.

கடவுச்சீட்டுக்களைப் பெறுவதற்கு மீண்டும் டோக்கன் வரிசையில் காத்திருக்க வேண்டியிருக்கின்றது என்று பொதுமக்கள் கூறுகின்றனர். அதிகாலை முதலே நீண்ட வரிசைகள் உருவாகின்றன என்றும், பலர் அதிகாலை 4 மணிக்கு அலுவலகம் முன்பாக வரிசையில் காத்திருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அதேவேளை, இலங்கையில் கடந்த காலங்களில் வெளிநாட்டுக் கடவுச்சீட்டுகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பான நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதுடன், புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வருவதன் மூலம் அந்த நெருக்கடி முடிவுக்கு வரும் என்று வெளிவிவகார அமைச்சர் தெரிவித்திருந்தார். (எ-இ)




முந்தியெண்டால் ஒவ்வொரு கட்சிக்குப் பின்னாலையும் அந்தக் கட்சியின்ர கொள்கை, கோட்பாடு பிடிச்ச வைதான் திரிவினம். அவைதான் கட்சிக்காக கூட்டங்கள் போடுவினம், சனத்திட்ட போய் வாக்குக் கேப்பினம். நோட்டீஸ்கூட அவைதான் ஒட்டுவினம். ஆனால் இப்ப கட்சிகளும், சுயேச்சைகளும் புழுத்துப் போய் கிடக்கிற இந்த எலக்சனில, அப்பிடி கொள்கையோடயோ, கோதாரியோடயோ ஒருத்தரும் கட்சியளோட நிக்கிறது கிடையாது. எல்லாரும் தனிப்பட்ட ஆதாயங்களுக்காகத்தான் கட்சியளுக்கு வேலை செய்யினம். அதையும் பிழை சொல்ல ஏலாது. இப்பத்தை நாட்டுநிலைமையில வேலை கிடைக்கிறதே பெருங் கஷ்டம். அப்பிடியான நிலைமையில நோட்டீஸ் ஒட்டுறதுக்கும், குடுக்கிறதுக்கும் ரண்டாயிரம், மூவாயிரம் எண்டு சம்பளம் கிடைச்சா அது அவைக்குப் பெரிய தொகைதானே. எலக்சன் காலத்தில உழைக்கிற காசை வைச்சு சின்னனா ஏதும் தொழில் தொடங்கலாமெல்லோ. இன்னும் சிலர் குடிக்கிறதுக்கு காசு வேணுமெண்டதுக்காகவும் இப்பிடி எலக்சனுக்கு நோட்டீஸ் ஒட்டுற வேலையளில திரியினம்.

இப்பிடி நோட்டீஸ் ஒட்டுறது உண்மையில சட்ட விரோதம். அவையள் நோட்டிஸோட நிண்டால், பொலிஸ் பிடிக்கிறதுக்குச் சட்டத்தில இடமிருக்குது. அதால கொஞ்ச நேரத்தில கனக்கக் காசு கிடைக்குதே எண்டதுக்காக கண்ணை மூடிக்கொண்டு இந்தவேலையைச் செய்யவும் முடியாது. எங்கையெங்க பொலிஸ் நிக்குது எண்டு றெக்கி எல்லாம் எடுத்துத்தான் நோட்டீஸ் ஒட்ட ஏலும். இப்பிடி நோட்டீஸ் ஒட்டுற ஒரு பதினேழு வயதுப் பெடியனைக் கண்ட கதையை யாழ்ப்பாணத்தில தேர்தல் திணைக்கள அதிகாரி ஒராள் மீடியாக்காரருக்குச் சொல்லியிருக்கிறார்.

ஒருநாள் இரவு அந்தப்பெடியனை நோட்டீஸும் கையுமா அதிகாரி பிடிச்சுப் போட்டார். எந்தக் கட்சியின்ர நோட்டீஸை அவன் வைச்சிருக்கிறானோ அந்தக் கட்சிக்கு எதிரா நடவடிக்கை எடுக்கலாம் எண்ட எண்ணத்தில அவனிட்ட இருந்த நோட்டீஸுகளை வாங்கிப் பார்த்திருக்கிறார். ஒவ்வொரு நோட்டீஸாப் பார்த்துக்கொண்டு வந்த அதிகாரிக்கு, அழுகிறதா சிரிக்கிறதா எண்டு தெரியாமல் போட்டுது. ஏனெண்டால், அந்தப் பெடியன் மூண்டு கட்சியின்ர நோட்டீஸை ஒட்டுறதுக்கு கொண்டந்திருக்கிறான். அதுவும் அந்த மூண்டு கட்சியும் ஆளையாள விழுங்கிற மாதிரி தங்களுக்குள்ள மல்லுக்கட்டுற கட்சியள். அப்பிடி பரம வைரியளான கட்சியளின்ர நோட்டீஸை ஒரே ஆளே, ஒரே நேரத்தில, ஒரே இடத்தில ஒட்டுறதெண்டது எவ்வளவு பெரிய பகிடி தெரியுமோ? ஆனா அந்தப் பெடியன் கிறுங்கேலை.

சேர், ஒரு கட்சிக்காரர் ஒரு நாளைக்கு 50 நோட்டீஸ் தான் தருவினம். ஒரு நோட்டீஸ் ஒட்ட 20 ரூபா கிடைக்கும். அதால நான் மூண்டு கட்சியளின்ர நோட்டீஸை வாங்கிக்கொண்டந்து ஒரேயடியா ஒட்டினால் எனக்கு ஒருநாளைக்கு மூவாயிரம் ரூபா ஒரேயடியாக் கிடைக்கும். அதால தான் இப்பிடி செய்யிறன். அடிக்கடி இப்பிடி எலக்சன் வந்தால் கொஞ்சம் பட்டினியில்லாமல் இருக்கலாம். எண்டு அப்பாவியாச் சொல்லியிருக்கிறான்.

இப்பிடித்தான் இஞ்ச கட்சியளின்ர நிலையும், அதைவைச்சு தங்கட வயித்துப்பாட்டை பாக்கிறவையின்ர கதையும் இருக்குது.



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேன் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை



கொழும்பு, ஒக்.29

இறக்குமதியைக் கட்டுப்படுத்தும் நோக்கில் உள்நாட்டுத் தேன் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று விவசாய அமைச்சுத் தெரிவித்துள்ளது.

கிராமங்கள் மற்றும் மகாவலி வலயங்களில் தேனீ வளர்ப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் விவசாய அமைச்சுக் குறிப்பிட்டுள்ளது. (எ-66)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## உயர் பட்டப்படிப்புகள் பீடம்
## புதிய அனுமதிகள்

1. கல்வியியல் முதுமாணி (MED) - 2024/25 (அணி VIII) வவுனியா பிராந்திய நிலையம்
2. பட்டப்பின் கல்வித் தகைமை கற்கை நெறி (PGD in Education) - 2024/26 (அணி VIII) வவுனியா பிராந்திய நிலையம் (பகுதி நேரம்)

மேற்படி சுயநிதிக் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிக விபரங்களை உயர்பட்டப்படிப்புகள் பீடத்தின் வலைத்தளத்தில் (www.grad.jfn.ac.lk) பார்வையிடலாம்.

**விண்ணப்ப முடிவுத்திகதி 29.11.2024**

**மேலதிக தொடர்புகளுக்கு 021 222 3608**

**பதிவாளர்**
**28.10.2024.**

(cr 43503) N-1



### வவுனியா கால்நடை வளர்ப்பாளர் கூட்டுறவுச் சங்கம் வருடாந்த பொதுச்சபைக் கூட்ட அழைப்பு (2024) (23/11/2024)

மேற்படி சங்க பொதுக்கூட்டம் எதிர்வரும் 23/11/2024 சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு புகையிரத நிலைய வீதியில் அமைந்துள்ள வவுனியா மாவட்ட கூட்டுறவுச் சபை கேட்போர் கூடத்தில் (சம்பத் வங்கிக்கு பின்) நடைபெறும். மேற்படி கூட்டத்தில் அங்கத்தவர்கள் தவறாது பங்கு பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

குறிப்பு:
பிரேரணைகள் யாவும் 11/11/2024 திகதி பிற்பகல் 04.00 மணிக்கு முன்பாக செயலாளருக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவும்.

**செயலாளர்.**

**தொடர்புகளுக்கு: 024 222 3367**


## மரண அறிவித்தல்

### கந்தையா கந்தசாமி

கப்புதூவைப் பிறப்பிடமாகவும், கரணவாய் தெற்கு வீரப்பதிராயன், மற்றும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கந்தசாமி அவர்கள் கனடாவில் நேற்று முன்தினம் (27.10.2024) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சத்தியவதியின் அன்புக் கணவரும், Lion உலகநாதன், வள்ளியம்மை, பரமானந்தம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல 40, 4ம் ஒழுங்கை,**
**பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்**
**Lion க. உலகநாதன்**

## மரண அறிவித்தல்

### அருணாசலம் பங்கிராஸ்



மன்னார் நாகதாழ்வினை பிறப்பிடமாகவும் இல 17, ஜெயந்திநகர் கிளிநொச்சியை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட அருணாசலம் பங்கிராஸ் அவர்கள் கடந்த (27.10.2024) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் இராசமணி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ராமு சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற றீற்றா அவர்களின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான திரேசம்மா தங்கம் மற்றும் அந்தோனிதாஸ் (செல்வம் அம்பாள் குளம் கிளிநொச்சி ) ஆகியோரின் அன்புச் சகோதரரும் அன்ரன் பிரான்ஸிஸ் (பிரான்ஸ்), அமலதாஸ் (லண்டன்), மேரிகிளாறா (பேபி) (பிரான்ஸ்), மேரிபுளோறன்ஸ் (வவா) (பிரான்ஸ்), அருட்தந்தை அலன்நிர்மலதாஸ் (செபமாலைதாஸர்சபை) காலஞ்சென்ற அலஸ்விமலதாஸ் (பவி), கணேசபுரம் ஆகியோரின் பாசமிகு தந்தையும் றாதா (பிரான்ஸ்), ஞானமலர் (லண்டன்), கமலராஜன் (பிரான்ஸ்), விவேகானந்தன் (பிரான்ஸ்) ரோகிணி (கணேசபுரம் .கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமனாரும் டெய்சி, ஜெஸ்மின், றாஜ், றொசான், றிஸ்சாந், ஜேசன், றுபேஸ், தனேஸ், சதீஸ், நிருஷா, யானி, நிவேதா, யஸ்டின், யஸ்டிகா சதுஸ்ரிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க திருப்பலி கிளிநொச்சி ஜெயந்திநகர் புனித அந்தோனியர் ஆலயத்தில் புதன்கிழமை காலை 10.00 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு ஆனந்தநகர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:குடும்பத்தினர்**
**மகன் FR-Alan**
**077 441 4374**

NO 17, ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.

(CR 45523 ) P-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேள்வி அறிவித்தல் - 2025
## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க் குறிப்பிடப்படும் பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள் என்பவற்றை 2025.01.01ஆம் திகதி தொடக்கம் 2025.12.31ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றது.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் காலம்: 2024.10.29 தொடக்கம் 2024.11.11 வரை அலுவலக நாட்களில் மு.ப.9.00–பி.ப. 3.00 மணி
கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி: 2024.11.12 மு.ப.10.00 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி: 2024.11.12 மு.ப.10.00 மணி

01. கேள்விப்பத்திரங்கள் 02 பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி, இணைப்பிரதி உட்பட 02 பிரதிகளையும் "தலைவர், உள்ளூர் அதிகாரசபை பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு உரிய காலப்பகுதிக்கு முன் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது அதற்கெனத் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும்
02. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தேசிய அடையாள அட்டையையும் அதன் நிழற்படப்பிரதியையும் கொண்டு வருவதுடன் கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. உள்ளூராட்சி மன்றங்களால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. படிவம் வழங்கப்பட்ட பின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
04. ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
05. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தலுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகள் நிராகரிக்கப்படுவதுடன், கேள்வி தொடர்பில் இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் பெறுகைக்குழுவிற்கே உள்ளது.
06. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிதிநிதியோ சமூகமளிக்கலாம்.
07. மாத வாடகையானது விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மீள்மதிப்பீட்டுத்தொகைக்கமைய அறவிடப்படும்.
08. சந்தையிலிருந்து 500M சுற்றுவட்டத்துக்குள் கடலுணவு,இறைச்சி,மரக்கறி விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.
09. குத்தகை,வாடகைக் கட்டணங்களுடன் அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் விதிக்கப்படும் வரியினை செலுத்துதல் வேண்டும்.
10. சித்தியடையும் கேள்விதாரர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை குறிப்பிடப்படும் காலப்பகுதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ள வேண்டும்.
11. கேள்விப்பத்திரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்வதுடன் கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்திலும் உப அலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை 2025 | மாதாந்த வாடகை |
|---|---|---|---|---|---|
| **மானிப்பாய் பட்டின உப அலுவலகம்** | | | | | |
| 1 | மானிப்பாய் பொதுச் சந்தை, (மரக்கறிச்சந்தை, மீன்சந்தை வாகன பாதுகாப்பு மற்றும் பொதுமலசலகூடம் உள்ளடங்கலானது) | 1,000.00 | 414,700.00 | 4,147,000.00 | - |
| 2 | மானிப்பாய் பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 34,210.00 | 342,100.00 | 3,500.00 |
| 3 | மானிப்பாய் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 132,000.00 | 1,320,000.00 | 3,500.00 |
| 4 | மானிப்பாய் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 5,349.00 | 53,492.18 | 3,500.00 |
| **மானிப்பாய் கிராம உப அலுவலகம்** | | | | | |
| 1 | காக்கைதீவு மீன் சந்தை (மேற்குபகுதிபுதிய கட்டடம்) (வாகன பாதுகாப்பு மற்றும் பொதுமலசலகூடம் உள்ளடங்கலானது) | 1,000.00 | 91,410.00 | 914,100.00 | - |
| 2 | நவாலி பிரசாத் சந்தை | 1,000.00 | 16,797.00 | 167,975.00 | - |
| 3 | நவாலி பிரசாத் சந்தை கோழியிறைச்சிக்கடை | 500.00 | 3,740.00 | 37,400.00 | 2,000.00 |
| 4 | நவாலி பிரசாத் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 51,568.00 | 515,680.00 | 2,000.00 |
| 5 | சாவற்கட்டுச் சந்தை | 1,000.00 | 31,872.00 | 318,725.00 | - |
| **பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம்** | | | | | |
| 1 | பண்டத்தரிப்பு பொதுச்சந்தை | 1,000.00 | 479,105.00 | 4,791,051.10 | - |
| 2 | பண்டத்தரிப்பு பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 70,488.00 | 704,881.10 | 2,250.00 |
| 3 | சாந்தைச் சந்தை | 1,000.00 | 90,585.00 | 905,850.00 | - |
| 4 | பண்டத்தரிப்பு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 311,630.00 | 3,116,300.00 | 2,250.00 |
| **பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம்** | | | | | |
| 1 | மாகியபிட்டி பொதுச் சந்தை | 1,000.00 | 36,300.00 | 363,000.00 | - |
| 2 | மாகியபிட்டி பொதுச் சந்தை கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 22,550.00 | 225,500.00 | 1,500.00 |
| 3 | மாகியபிட்டி பொதுச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 51,513.00 | 515,130.00 | 1,500.00 |
| 4 | இளவாலை பொதுச் சந்தை | 1,000.00 | 19,360.00 | 193,600.00 | - |
| 5 | இளவாலை பொதுச் சந்தை கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 7,700.00 | 77,000.00 | 1,000.00 |
| 6 | இளவாலை பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 39,130.00 | 391,303.00 | 1,000.00 |
| 7 | மாதகல் பொதுச் சந்தை | 1,000.00 | 36,300.00 | 363,000.00 | - |
| 8 | மாதகல் பொதுச் சந்தை கோழியிறைச்சிக்கடை | 500.00 | 3,492.00 | 34,925.00 | 1,250.00 |
| 9 | மாதகல் பொதுச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 28,589.00 | 285,890.00 | 1,250.00 |

தலைவர்,
உள்ளூர் அதிகாரசபை பெறுகைக்குழு,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

திகதி: 29.10.2024

## மரண அறிவித்தல்

தோற்றம்
11
09
1972



மறைவு
27
10
2024

### சிவகுரு மோதிலால் கந்தையா
### (சிரேஷ்ட கணக்காளர், நகர சபை, வவுனியா)

நவாலியைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் (தற்காலிக வசிப்பிடம்-வவுனியா) கொண்ட சிவகுரு மோதிலால் கந்தையா அவர்கள் நேற்று முன்தினம் (27.10.2024) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை செல்லமுத்துவின் அன்பு பேரனும் சிவகுரு - இராசபூபதி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற பே.யுவானி, றெயினா மகேஸ்வரியின் அன்பு மருமகனும் மிரியம் வொலன்ரினா (அபிவிருத்தி உத்தியோகத்தர், வெங்கல செட்டிக்குளம் பிரதேச செயலகம்) அவர்களின் பாசமிகு கணவரும், கஷோனா (வவுனியா/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்), அஸ்ரேனா (வவுனியா/சைவப்பிரகாசம் மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெகயீவன் (ஆசிரியர், கொழும்பு சர்வதேச பாடசாலை), கேதாரகௌரி (பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், நல்லூர்), வித்தியா கௌரியின் அன்புச் சகோதரனும் மதிவர்ணன் (ஆசிரியர், யாழ். பரியோவான் கல்லூரி), சுஜீத்தா (பணிப்பாளர், ERD மத்திய வங்கி), மோகனராஜ் (அபிவிருத்தி உத்தியோகத்தர், சங்கானை பிரதேச செயலகம்) மிரியம் கொன் செப்ரா (ஆசிரியர் யா/கோட்டைக் காடு அ.மி.த.க பாடசாலை கிறிஸ்ரி வொலன்ரைன் (உரிமையாளர் டல்லா புடவையகம்), டெலஸ் கொன்ஸ்ரன்ரைன் (வியாபாரி சுன்னாகம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் இருதயநாதன் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) மேரி கலிஸ்ரா (அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ் மாநகரசபை) அதிசயமலர் (வலயக்கல்வி பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம்-மடு) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாயில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இன்று (29.10.2024) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்பு:
077 6266 337

(CS 1719) V-1

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம்
28
10
1928



மறைவு
28
10
2024

### அமரர் நாகரத்தினம் சோமசுந்தரம்

அராலி தெற்கை பிறப்பிடமாகவும், செட்டித்தெரு, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகரத்தினம் சோமசுந்தரம் அவர்கள் நேற்று (28.10.2024) திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-பொன்னம்மா தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான கந்தப்பு-சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சோமசுந்தரம் (ஓய்வு பெற்ற தொலைத்தொடர்பு திணைக்கள இலிகிதர்) அவர்களின் பாசமிகு மனைவியும், சிவகுமாரன் (ஓய்வு பெற்ற தொழிநுட்ப உதவியாளர் RDA), தேவகுமாரி (ஓய்வு பெற்ற ஆசிரியை சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), நிர்மலகுமாரி (ஓய்வு பெற்ற ஆசிரியை), பரிமளகுமாரி, நந்தகுமாரி, சீராளன் (லண்டன்), அன்பழகன்(நோர்வே), அமரர் திருவருட்செல்வன், வாசுதன் (லண்டன்) ஆகியோரின் அருமைத்தாயாரும், குமுதினி (மருந்தாளர் வைத்தியசாலை வவுனியா), சிவராஜேஸ்வரன் (ஓய்வு பெற்ற சுகாதார உத்தியோகத்தர் யாழ் மாநகர சபை), அமரர் சண்முகமூர்த்தி (ஓய்வு பெற்ற ஆசிரியர்), சுந்தரலிங்கம் (ஓய்வு பெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்), விஜயகுமார் (ஓய்வு பெற்ற பொது சுகாதார பரிசோதகர் யாழ் மாநகரசபை), கிரிஷா (லண்டன்), முருகவேணி (நோர்வே), துஷிதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ரூபகாந்தன் (உதவிமுகாமையாளர் மக்கள் வங்கி), காந்தரூபினி, மிதுரன் (சிங்கப்பூர்), விதுரன் (கனடா), அபிராமி (Mas Active Navala), ஆரணி (B.A), துஷாயினி (B.A), கயல்விழி (பல் வைத்தியர் நோர்வே), கம்சன் (பொறியியலாளர் நோர்வே), திவ்வியன் (பொறியியலாளர் நோர்வே), நிகிதா, கிரிஷாந்த், கிஷோபா (பல்கலைக்கழகம் லண்டன்), சர்மிலன், நிவர்சினி, தவகரன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், அமரர் அருளானந்தம், செல்லம் வைத்திலிங்கம், தையல்நாயகம் சிறீகாந்தா ஆகியோரின் உடன் பிறந்த சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (30.10.2024) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 11.00 மணியளவில் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

50/36, செட்டித்தெரு, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.

## ஆதனப்பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 23, பாங்ஷால் வீதி, 362 ம் ஆதன இலக்கத்தைக் கொண்ட ஆதனம் கபிரியேலின் உரிமையாளர் என்ற பெயரில் யாழ் மாநகரசபை ஆதனப்பதிவேட்டில் காணப்படுகின்றது.

மேற்குறித்த ஆதனத்தினை பிலிப்பு கைம்பெண் செல்லம்மா 13.09.2000 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு நன்னியன் தம்பி முத்தன் முகதாவில் 2415 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் பிலிப்பு கிறி சோஸ்ரமும் பெண் மங்களமும் என்பவரிற்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

மேற்குறித்த உறுதியில் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்ற 605 இலக்க தத்துவ வழக்கில் கண்டிருப்பதில் கணபதி கந்தர் வழியால் தனக்கு வந்தடைந்த உரிமையும், ஆட்சியும் என செல்லம்மாவினால் குறிப்பிடப்பட்டுள்ளது.

பின்னர் குறித்த ஆதனத்தை பிலிப் கிறிஸ்ரோறமும் பெண் மங்களமும் 2000.10.21 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு Y. சத்தியநாதன் முகதாவில் 376 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதி மூலம் சிவக்கொழுந்து தங்கராசா பெண் சுகந்தி என்பவரிற்கு சீதனமாக வழங்கியுள்ளனர்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று, கரையூர் இறை, குடியிருப்பு நிலப்பரப்பு இரண்டும் குளி இரண்டும் வீடும் மலசலகூடமும் செய்பயிர் வான்பயிர்களும் இதில் கிழக்குப்பக்கமாக நிலப்பரப்பு ஒன்றும் குளி ஒன்றும் (நி.ப 1 குளி 1) இதற்குள் அடங்கிய வீட்டின் பகுதியும் மற்றையவைகளும். இதற்கு எல்லைகள்

கிழக்கு : இதன் மிகுதி ஆதனம்
வடக்கு : வீதி
மேற்கு : பொன்னையா பெண் சின்னம்மாவுக்குரிய ஆதனம்
தெற்கு : பூதர் தம்பிப்பிள்ளைக்குரிய ஆதனமும்
இவ்வெல்லைப்படி அடங்கலும் இன்னும் இதற்குச் சேர்ந்தவைகளும்

தற்போது சிவக்கொழுந்து தங்கராசா பெண் சுகந்தி இவ்வாதனத்தை தனது பெயரினை எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் ஒரு பகுதிக்கு / முழுவதற்கும் உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சிவக்கொழுந்து தங்கராசா பெண் சுகந்தி எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பிரச்சினைகளுக்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆணையாளர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

(CS/43505) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரையுள்ள விசுவமடு விவசாயிகள் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்

## பதிவு இல :- PA - 56 12.09.1972

## நவீன அரிசியாலை குத்தகை அடிப்படையில் வழங்குதல்

எமது சங்கத்திற்கு வள்ளுவர்புரம் விசுவமடுவில் அமைந்துள்ள அரிசி ஆலை தொழிற்சாலையும் அதனுடன் இணைந்த இரண்டு நெற்களஞ்சிக் கட்டடம் சொத்துக்கள் என்பவற்றையும் மூன்று வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கீழ்வரும் நிபந்தனைகள் அடிப்படையின் கீழ் தகுதியான ஆர்வமுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. குத்தகை முற்பணமாக ஆகக் குறைந்த தொகையாக ரூபா முப்பது இலட்சம் (ரூபா 3மில்லியன்) எதிர்பார்க்கப்படுகின்றது.

02. மாதக் குத்தகையாக ஆகக் குறைந்து ரூபா இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் (ரூபா 250,000.00) எதிர்பார்க்கப்படுகின்றது. ஒவ்வொரு மாதமும் 10ம் திகதிக்கு முன்னராக விசுவமடு விவசாயிகள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு மாதந்தம் குத்தகைப் பணம் வழங்கப்பட வேண்டும்.

03. Boiler Unit (1.5TON.CAP), Rice color sorter unit (2 TON/HOUR) ஆகிய வசதிகள் உண்டு. மூன்று வருடங்களின் பின்னர் இருதரப்பினர் சம்மதத்துடன் ஒப்பந்தம் புதுப்பிக்கப்படலாம்

04. குத்தகைக்கு கொள்பவர் வேறு நபர்களுக்கு ஃநிறுவனங்களுக்கு உப ஒப்பந்தம் மூலமோ அல்லது வேறு வகையிலோ கை மாற்ற முடியாது.

05. குத்தகை ஒப்பந்தம் முடிவுறுத்தல் தொடர்பிலும் அரிசி ஆலைத்தொழிற்சாலை தொடர்பான திருத்தம் பராமரிப்பு ஏனைய விடயங்கள் தொடர்பிலும் தெளிவான எழுத்து மூலமான ஒப்பந்தம் ஒன்று இரு தரப்பாலும் கைச்சாத்திடப்படும்.

06. அரிசி ஆலையை வாடகைக்குப் பெற்றுக்கொள்பவர். சங்கத்தின் அனுமதியின்றி காணி கட்டடத்தில் மேலதிக வேலைத்திட்டங்களாக நிரந்தர இணைப்புக்கள் எதனையும் செய்ய முடியாது எனவும் அவ்வாறு செய்யின் சங்கத்தின் எழுத்து மூல அனுமதியுடன் மட்டுமே செய்யும் ஏற்பாடு.

07. அரிசியாலையை வாடகைக்குப் பெற்றுக்கொள்பவர். அங்குள்ள தளபாடங்கள். உபகரணங்கள் மற்றும் பொறித்தொகுதிகள் என்பவற்றைப் பொறுப்பேற்கும் போது பட்டியலிட்டுப் பெற்றுக்கொள்வதுடன் ஒப்பந்த காலம் முடிவடைந்ததும் அதே பொருட்களை இயங்குநிலையில் மீளக் கையளிப்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும் என்று ஏற்பாடுகள்.

08. ஒப்பந்த காலத்தில் அரிசி ஆலை வளாகத்தில் சங்கத்தின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படக்கூடிய செயற்பாடுகள் அல்லது சமூக விரோத செயற்பாடுகள் இல்லாத வகையில் செயற்படுத்தப்பட வேண்டும் என்பதை வாடகைக்குப் பெற்றுக்கொள்பவருக்கு சங்கம் வலியுறுத்த வேண்டும்.

09. முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சகல பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்துவ பணியாளர்களின் பொருளாதார நலவுருத்துக்கள் பாதிக்கப்படாத வகையிலும் கிடைக்கப் பெறுவதையும் உயர்வான மட்டத்திலும் பேணப்படுவதையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் அரிசி தங்களின் தெளிவான இயலுமையை புரணமாக வெளிப்படுத்தி எதிர்வரும் 29.11.2024ஆம் திகதி மதியம் 12 மணிக்கு முன்னர் எனக்கு கிடைக்கக் கூடியதாக கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு விண்ணப்பத்தினை பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். குறித்த தொழிற்சாலையை நேரடியாக சென்று பார்வையிட விரும்பின் தலைவர் அல்லது பொதுமுகாமையாளருடன் கீழ் குறிப்பிடப்படும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்,
விசுவமடு விவசாயிகள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
விசுவமடு,
முல்லைத்தீவு.

## வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை
### வழங்குநர்களையும் ஒப்பந்ததாரர்களையும் பதிவு செய்தல் - 2025

சபையானது 2025 ஆம் ஆண்டுக்கான கீழ்க் குறிக்கப் பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்களை ஏற்கவுள்ளது.

**பொருட்கள்**

1. காகிதாதிகள். எழுது பொருட்கள்
2. அலுவலக உபகரணங்கள்
3. அலுவலக தளபாடங்கள் மரம் இரும்பு பிளாஸ்ரிக் ஏனையவை
4. இதர(others) மற்றும் வீட்டு உபயோகப்பொருட்கள்
5. மின்சார. மின் பாவனைப்பொருட்கள் மற்றும் மின்னணுப் பொருட்கள்
6. வன்பொருட்கள் கற்கள். மணல். கிரவல் ஏனையவை (மற்றும் கட்டுமானப்பொருட்கள்)
7. விவசாய இயந்திர சாதனங்கள் மற்றும் உள்ளீடுகள்
8. புடைவை வியாபாரம் (டெக்ஸ்டைல்ஸ் பொருட்கள் மற்றும் திரைச்சீலைகள)
9. விளையாட்டுப்பொருட்கள் மற்றும் விளையாட்டுஉபகரணங்கள்
10. ஆலை மற்றும் இயந்திரங்கள்
11. சிற்றுண்டிகள் மற்றும் உணவுகள் வழங்கல்
12. மருத்துவஉபகரணங்கள் மற்றும் மருந்து வழங்கல்
13. நூலகங்களுக்கான நூல்கள்
14. தீந்தைகள் வகைகள் (Paints),நிறம் தீட்டும் பொருட்கள்
15. நீர் வழங்கும் குழாய்கள். கியூம் பைப்புகள் (Hume Pipe)மற்றும் ஏனைய பொருட்கள்
16. வாகன உதிரிப்பாகங்கள்மற்றும் துணைப் பொருட்கள்
17. எரி பொருட்கள். உராய்வு நீக்கிகள்
18. இரும்பு பொருட்கள்
19. தீராந்திகள். பலகைகள்
20. பனைமரங்கள். சலாகைகள்
21. வாகனங்களுக்கான டயர். ரீயூப் மற்றும் மின்கலங்கள்
22. கணினி. பிரதியாக்கல் இயந்திரத்திற்கான உதிரிப்பாகங்கள் மற்றும் உள்ளீடுகள்
23. சுத்திகரிப்பு பொருட்கள். கிருமி நாசினிகள்
24. பாதணிகள். தோற்பொருட்கள்
25. அலங்காரப்பொருட்கள்
26. இலத்திரனியல் பொருட்கள்
27. மோட்டார் வாகனங்களுக்கான உதிரிப்பாகங்கள்

**சேவைகள்**

1. அலுவலக உபகரணங்கள் பழுதுபார்த்தல்
2. அலுவலக தளபாடங்கள் பழுதுபார்த்தல்
3. வாகனங்கள் பழுதுபார்த்தல்
4. மின்சார மற்றும் மின்னியல் பொருட்களின் பழுதுபார்த்தல்
5. அனைத்துவகையான அச்சிடுதல்மற்றும் புத்தகங்கள் கட்டுதல்
6. வாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல்
7. வாடகைக்கு அலுவலக உபகரணங்களை பெற்றுக்கொள்ளல்
8. ஒளி மற்றும் ஒலி அமைப்பு மற்றும் மின்சாரபொருட்களை வாடகைக்குப்பெற்றுக்கொள்ளல்
9. பாதுகாப்பு மற்றும் துப்புரவு சேவைகள்
10. வர்ணம்தீட்டும் வேலைகள்
11. ஒட்டுவேலைகள். உலோக வேல்லைகள் (வெல்டிங்வேலைகள்)
12. மின்சாதனங்கள் திருத்தம். மீள மின்வலுவூட்டல் (Battery Charge)
13. இலத்திரனியல் சாதனங்கள் திருத்தம்
14. வாகனங்களின் ரியூப் ஒட்டுதல்
15. வாகன சுத்திகரிப்பு மேற்கொள்ளல்
16. கோலவுடை. சீருடை தைத்தல்
17. கணினி பிரதியாக்கம் இயந்திரம் திருத்தல். சுத்திகரிப்பு (Service)
18. இறப்பர் முத்திரை தயாரித்தல்
19. வாகனங்கள் திருத்தம் செய்தல்
20. கழிவகற்றல் சேவைகள்

**ஒப்பந்த வேலைகள் (ICTAD பதிவு உள்ளவர்கள் மட்டும்)**

01. கட்டட நிர்மாணம் மற்றும் மறுசீரமைப்பு வேலைகள்
02. நீர்பாசனம் ,நெடுஞ்சாலை , பாலம் மற்றும் நீர்வழங்கல் கிணறு மற்றும் குழாய்கிணறு அமைத்தல்
03. வீதி நிர்மாணம். திருத்த வேலைகள்

- பதிவானது ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் தனித்தனியான விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும்.
- விண்ணப்பபடிவங்களை சபையின் தலைமை அலுவலகத்தின் முன் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
- ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதிவுக்கட்டணமாக ரூபா 1200.00 செலுத்தப்படல் வேண்டும்.
- விண்ணப்பப்படிவங்கள் கடிதஉறையின் இடதுபக்க மேல்மூலையில் "வழங்கல்/ஒப்பந்த சேவைக்கான விண்ணப்பம் - 2025" எனக்குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் செயலாளர். தலைமைக்காரியாலயம் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை. நேரியகுளம் வீதி. நெளுக்குளம். வவுனியா. எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
- விண்ணப்படிவங்கள் 19.11.2024 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.
- காலதாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
- மேலதிக விபரங்களுக்கு 024-2225737/ 024-2050067 எனும் அலுவலக தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**செயலாளர்,**
**வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைஇவவுனியா.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.

## சந்தைகள், கோழியிறைச்சி மற்றும் கருவாட்டுக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் 2025

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட சந்தைகள், கோழியிறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள், என்பவற்றிற்கு 2025.01.01 ஆம் திகதி தொடக்கம் 2025.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி : 2024.10.29 2024.
11.12 நண்பகல் 12.00 மணி வரை

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி: 2024.11.12
பி..ப 2.00 மணி வரை

கேள்விதிறக்கும் திகதி : 2024.11.12
பி.ப 2.30 மணி

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை செயலாளர் வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டுப் பதிவுத்தபால் மூலம் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரியநேரத்திற்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்;ராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்;ராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

1. கேள்விப் பத்திரம் / பத்திரங்கள் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன் தாம் வதியும் இடத்தின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

2. சங்கானை நவீன மீன் சந்தையில் கோழி இறைச்சிக்கடைக்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளதால் இச்சந்தை வளாகத்திற்குள் கோழி விற்பனை, கோழி உரித்தல் என்பன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

3. சந்தைகளை குத்தகைக்கு எடுப்பவர்கள் மீன் சந்தையின் மீன் வெட்டும் இடத்தினது தூய்மைக்குப் பொறுப்பாக இருப்பதுடன் பொது சுகாதார பரிசோதகரின் அறிவுறுத்தலுக்கமைய பராமரிப்பதுடன் தொடர்ந்து இதனைக் கண்காணித்து நடைமுறைப்படுத்தல் வேண்டும். மீன் வெட்டுபவர்களிடம் பணம் அறவிடலாம்.

4. பல்லசுட்டி சந்தை குத்தகைக்கு எடுப்பவர்கள் அதனை நடாத்துவதற்குரிய இடத்தினை தற்போது சந்தை இயங்கும் இடத்திலிருந்து 500அ சுற்றுவட்டத்தினுள் தாமே தெரிவுசெய்தல் வேண்டும். மேலும் தெரிவு செய்த இடத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு பொதுச்சுகாதார பரிசோதகரின் சிபார்சுக்கு அமையவே செயற்படவேண்டும். அத்துடன் தெரிவு செய்யும் இடத்திற்கான குத்தகை அல்லது வாடகை குத்தகையாளராலேயே கொடுக்கப்படவேண்டும்.

5. உள்ளூராட்சி மன்றங்களால் தவறுனராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.

6. ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

7. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும், போதிய காரணங்களால் எந்தவொரு கேள்வியையும் ஏற்கவோ நிராகரிக்கவோ கேள்விச்சபை தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

8. தெரிவு செய்யப்படும் கேள்விக்தாரர் கேள்வித்தொகையின் 1/3 பகுதியை .2024 நவம்பர் 19 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்துகொள்ள வேண்டும்.

9. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதி ஒருவரோ சமுகமளிக்கலாம்.

10. ஒப்பந்தகாரர் குத்தகை ஏற்கும் போது உள்ள கட்டடத்தின் தரம், கட்டட அமைப்புக்கள் யாவும் உரியமுறையில் பேணப்பட்டு குத்தகைக் காலம் பூர்த்தியடையும் போது மீண்டும் அதே நிலையில் கையளித்தல் வேண்டும்.

11. சந்தைகளைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் சந்தைகளின் தூய்மைக்கு பொறுப்பாக இருப்பதுடன் கழிவுகள் சேகரிப்பதற்குள்ள கூடைகளில் கழிவுகளை இடல் வேண்டும்

12. சந்தைகளைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் வியாபார நோக்கத்திற்காக கொண்டு வரும் பொருட்களின் விற்பனை விலையில் 4% உம், மீன், இறால், நண்டு, கணவாய் கிலோ ஒன்றிற்கு ரூபா 10.00 உம், வியாபார நோக்கத்திற்கு வரும் லொறிக்கு ரூபா 30.00 உம், வியாபாரிகளிற்கான இடவரி தொடர்பில் மரக்கறிச் சந்தை, மீன் சந்தை, விற்பனை செய்யும் இடத்திற்கு ரூபா 100.00 உம் மீன் வெட்டும் இடம் ஊடு ஒன்றிற்கு (5" X 3") ரூபா 150.00 உம் ஈருருளிப் பாதுகாப்புக் கட்டணம் ரூபா 10.00, உந்துருளிப் பாதுகாப்புக் கட்டணம் ரூபா 20.00 இனையும் அறவிடலாம். மேலதிகமாக் எவ்வித கட்டணங்களும் அறவிடக்கூடாது. பொதுச்சந்தையில் கழிவு நடைமுறை தரகுக் கட்டண நடைமுறை என்பன முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

13. பொதுமலசலகூடத்தைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்பட்ட கட்டணம் ரூபா 20.00 ற்கு மேல் வரி அறவிட முடியாது.

14. வாகனப் பாதுகாப்பு நிலையத்துடன் சந்தையை குத்தகைக்கு பெறுபவர்கள் "ஈருருளிப் பாதுகாப்புக் கட்டணம்" அல்லது "உந்துருளிப் பாதுகாப்புக் கட்டணம்" என்ற சிட்டையைக் கொடுத்து அதற்குரிய பணத்தை அறவிடமுடியும். சந்தைக்கு வெளியே எந்த ஒரு கட்டணத்தையும் அறவிடமுடியாது.

15. பின்வரும் சந்தைகளைக் குத்தகைக்கு எடுக்கும் குத்தகைக்காரர்கள் மாதாந்தம் நிலையான மின்சாரக்கட்டணமாக கீழ்வரும் விபரப்படி மாதாந்தக்குத்தகையுடன் செலுத்துதல் வேண்டும். சங்கானை மரக்கறிச்சந்தை15,000.00, சங்கானை மீன் சந்தை 3,000.00, சத்தியக்காட்டுச்சந்தை 1,500.00.

16. சந்தைச் சுற்றாடலில் இருந்து 500அ சுற்றுவட்டத்தில் மீன், மரக்கறி, கோழி இறைச்சி என்பன விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

17. காலத்திற்கு காலம் அரசாங்க சுற்றறிக்கைகள் மூலம் அறவிடுமாறு அறிவிக்கப்படும் வரிகள் வாடகைத்தொகை மீள் மதிப்பீடு செய்யப்படின் அத்தொகையும் அறவிடப்படும்.

## சந்தைகள், கோழியிறைச்சி மற்றும் கருவாட்டுக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான குத்தகை அட்டவணை 2025

| இல | சந்தைகள் (வாகனப் பாதுகாப்பு நிலையத்துடன்), இறைச்சிக்கடைகள் கருவாட்டுக் கடைகள் | மாதாந்த வாடகை சபைக்குச் செலுத்த வேண்டியது | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| | **சங்கானை உப அலுவலகம்** | | | | |
| 01 | சங்கானை மரக்கறிச்சந்தை | ...... | 17,160,000.00 | 172,000.00 | 1,000.00 |
| 02 | சங்கானை மீன் சந்தை | —— | 2,882,000.00 | 29,000.00 | 1,000.00 |
| 03 | சங்கானை கருவாட்டுக்கடை | 1,500.00 | 62,200.00 | 1,500.00 | 1,000.00 |
| 04 | சங்கானை கோழி இறைச்சிக்கடை | 1,500.00 | 265,650.00 | 3,000.00 | 1,000.00 |
| 05 | சங்கானை மாட்டிறைச்சிக்கடை | 1,500.00 | 2,099,500.00 | 21,000.00 | 1,000.00 |
| 06 | மீன் சந்தை வாகன தரிப்பிட குத்தகை | 1,500.00 | 903,000.00 | 10,000.00 | 1,000.00 |
| 07 | சங்கானை மரக்கறிச் சந்தை பொது மலசலகூடம்- 01 | | 25,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 08 | சங்கானை மரக்கறிச் சந்தை பொது மலசலகூடம்- 02 | | 25,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 09 | சங்கானை பஸ்தரிப்பிட பொது மலசலகூடம் | | 25,000.00 | 1,000.00 | 1,000.00 |
| | **சுழிபுரம் உப அலுவலகம்** | | | | |
| 01 | சத்தியக்காட்டுச் சந்தை (மரக்கறிச் சந்தை மீன் சந்தை வாகனத்தரிப்பிடம் தவிர்த்து) | - | 2,508,000.00 | 26,000.00 | 1,000.00 |
| 02 | சத்தியகாடு சந்தை வாகனத்தரிப்பிடம் | - | 106,700.00 | 1,500.00 | 1,000.00 |
| 03 | சத்தியகாடு சந்தை கருவாட்டுக் கடை | 1300.00 | 45,550.00 | 1,000.00 | 1,000.00 |
| 04 | சத்தியக்காட்டுச்சந்தை கோழி இறைச்சிக்கடை | 1300.00 | 242,000.00 | 2,500.00 | 1,000.00 |
| 05 | பொன்னாலை வாராந்தச் சந்தை | | 47,550.00 | 1,000.00 | 1,000.00 |
| 06 | தொல்புரம் மத்திய சந்தை | | 27,850.00 | 1,000.00 | 1,000.00 |
| 07 | பல்லசுட்டி சந்தை (குத்தகைக்கு எடுப்பவரே இடத்தெரிவு செய்தல் வேண்டும்) | | 30,850.00 | 1,000.00 | 1,000.00 |
| 08 | மூளாய் மீன் சந்தை | | 121,000.00 | 1,500.00 | 1,000.00 |
| | **வட்டுக்கோட்டை உப அலுவலகம்** | | | | |
| 01 | சங்கரத்தை சந்தை | —— | 561,900.00 | 6,000.00 | 1,000.00 |
| 02 | வட்டுக்கோட்டை பொதுச்சந்தை | —— | 59,200.00 | 1,000.00 | 1,000.00 |
| 03 | சங்கரத்தை கோழி இறைச்சிக்கடை | 1,750.00 | 135,850.00 | 1,500.00 | 1,000.00 |
| 04 | சங்கரத்தை மாட்டு இறைச்சிக்கடை | 1,750.00 | 475,200.00 | 5,000.00 | 1,000.00 |
| | **அராலி உப அலுவலகம்** | | | | |
| 01 | அராலி, செட்டியார்மடம் சந்தை | —— | 31,350.00 | 1,000.00 | 1,000.00 |

**ச.பாலரூபன்**
**தலைமை அலுவலகம்,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை,**
**சுழிபுரம்.**
**2024.10.29**

**செயலாளர்,**
**உள்ளூர் அதிகார பெறுகைச் சபை,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை,**
**சுழிபுரம்.**

### வலிகாமம் மேற்கு பிரதேசசபை - சுழிபுரம்
### கடைகளை வாடகைக்கு வழங்குதல் - 2025

வலிகாமம் மேற்கு பிரதேச சபையினால் கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கடைகளை உள்ளூராட்சி ஆணையாளரின் 1980ஃ46 ஆம் இலக்க1980.12.11 ஆம் திகதிய சுற்றுநிருபத்திற்கு அமையவும் விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட மாதாந்த வாடகைக்கு அமைவாகவும் வாடகைக்கு வழங்குவதற்கான ஆகக் குறைந்த ஒரே முறையில் செலுத்தக்கூடிய தொகைக்கான கேள்விகள் வலிகாமம் மேற்கு பிரதேச சபையினால் கோரப்படுகின்றது.

| தொடர் இல. | கடை விபரம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | மீளளிக்க முடியாத கேள்விப்படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | சுழிபுரம் நவீன சந்தைக் கடை இல. - 05 | 405,000.00 | 8,100.00 | 1000.00 |

**கேள்வி நடைமுறைக்கு மேற்குறித்த திகதிகள் பொருத்தமானது. மேலதிக நியந்தனைககளை அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.**

**ச.பாலரூபன்**
**செயலாளர்,**
**உள்ளூர் அதிகார பெறுகைச் சபை,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை,**
**சுழிபுரம்.**
**2024.10.29**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தீபாவளியை முன்னிட்டு பச்சிலைப்பள்ளி பிரதேச சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவும் தொழில் துறைத் திணைக்களமும் இணைந்து உள்ளூர் உற்பத்தி பொருள்களுக்கான விற்பனை சந்தையை பிரதேச செயலக வளாகத்தில் நேற்றுத் திங்கட்கிழமை நடத்தியது. (ஏ-25, 9)

# வாக்காளர் அட்டை விநியோகம்; கடமைகளில் 8 ஆயிரம் பேர்!

கொழும்பு, ஒக்.29

நாடாளுமன்றத் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை விநியோகம் நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியிருந்தநிலையில், கொழும்பு மற்றும் வன்னி மாவட்டங்களில் நேற்று ஆரம்பமானது என்று தபால் திணைக்களம் தெரிவித்தது.

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளுடன் தேவையான அறிவித்தல்களை தேர்தல்கள் ஆணைக்குழு வழங்காமையால் இவ்விரு மாவட்டங்களிலும் விநியோகம் தாமதமாகியுள்ளது என்று சிரேஷ்ட பிரதி தபால் மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழு இப்போது தேவையான அறிவித்தல்களை வழங்கியுள்ளது.

அவை நியமிக்கப்பட்ட தபால் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. வாக்காளர் அட்டை விநியோகத்துக்காக சுமார் 8 ஆயிரம் ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

நவம்பர் 7 ஆம் திகதிக்குள் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் கிடைக்காதவர்கள் அருகிலுள்ள தபால் நிலையத்தில் அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

அதேவேளை, நாடாளுமன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நடவடிக்கைகள் நவம்பர் மாதம் முதலாம் மற்றும் 4ஆம் திகதிகளில் நடைபெறும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. இந்த திகதிகளில் வாக்களிக்க முடியாத அரச ஊழியர்கள் நவம்பர் மாதம் 7 மற்றும் 8 ஆகிய திகதிகளில் வாக்களிக்களிப்பை உறுதிசெய்வதற்கான வசதிகள் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-இ)

வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை
பெறுகைகள் அறிவித்தல் - பாதுகாப்புச்சேவை 2025

1. பாதுகாப்புச்சேவையின் விபரமும் வைப்புத் தொகைகளும்

| இல | விபரம் | காலப்பகுதி | மதிப்பீடு (Day & Night 12hrs shift duty per day) | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத்தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01 | பாதுகாப்புச் சேவை வழங்கல் -பிரதான அலுவலகம் (வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை) | 01/01/2025 – 31/12/2025 | 02 Nos | 1000.00 | 20000.00 |

2. வைப்புக்கள்
பெறுகைக்கான வைப்புத்தொகைகளை (மீளளிக்கப்படாத, மீளளிக்கப்படும்) வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் வருமான பிரிவில் சமர்ப்பித்து பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம். தெரிவு செய்யப்படாத பெறுகை மனுதாரர்களுக்கு பெறுகைகளுக்கான ஒப்பந்தம் ஒப்படைக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டதும், மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணம் மீளளிக்கப்படும்.

3. வியாபாரப் பதிவு சான்றிதழ்
பெறுகைப் பத்திரம் கோரும், நிறுவனங்கள் வியாபாரப் பதிவு படிவத்தின் மூலப்பிரதியின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் வடமாகாணத்தில் நிரந்தரப் பதிவினைக் கொண்டிருத்தல் அல்லது தொடர்பு கொள்ளக்கூடிய தமது கிளை அலுவலகத்தினையாவது கொண்டிருத்தல் வேண்டும்.

4. அனுபவ சான்றிதழ்
கடந்தகால, நிகழ்கால அனுபவச்சான்றிதழ்களையும் பெறுகை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். காவல் சேவை வழங்கும் நிறுவனங்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டிருப்பதற்கான வலுவிலுள்ள அத்தாட்சிப் பத்திரத்தின் மூலப்பிரதியின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. வரி
உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரிச்சட்ட ஏற்பாடுகளுக்கமைய சகல வரி அறவீடுகளுக்கும் சகல வரி செலுத்தல்களுக்கும் அனைத்து ஒப்பந்தக்காரர்களும் உட்படுதல் வேண்டும்.

6. கூலி வீதங்கள்
6.1. பாதுகாப்பு சேவை ஊழியர்களினுடைய ஆகக்குறைந்த சம்பளமானது. சம்பள சபையினால் நிர்ணயிக்கப்படும் கூலி வீதத்துடன் இணங்கியதாக இருத்தல் வேண்டும்.
6.2. கூலி வீதங்கள் உட்பட சித்தியடைவதற்கான தகைமைகளை ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்கள் கொண்டிருக்குமிடத்து சேவையின் தரம் மற்றும் அனுபவங்களின் அடிப்படையில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்படும் தீர்மானமே இறுதியானதாகும்.

7. பெறுகைப் படிவங்கள்/ஆவணங்கள்
பெறுகை ஆவணங்கள் 29.10.2024 ஆம் திகதி தொடக்கம் 19.11.2024 ஆம் திகதி வரை அலுவலக கடமை நேரத்தில் காலை 9.00 மணி முதல் பி.ப 3.00 மணி வரை வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். பெறுகைப் படிவங்கள் அனைத்தும் இரு பிரதிகளில் மூலப்பிரதி, நகல் பிரதி எனக் குறிப்பிட்டு அனுப்பப்படல் வேண்டும்.

8. பெறுகைகள் விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முறையும் இறுதித் திகதியும்
சகல முத்திரையிடப்பட்ட பெறுகைகளும் "தலைவர் பெறுகைகள் குழு, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, வவுனியா" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் அல்லது வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் இடப்படுவதன் மூலம் கிடைக்கப்பெறல் வேண்டும். கடிதத்தின் இடதுபக்க மேல் மூலையில் "பாதுகாப்புச் சேவை 2025" என குறிப்பிடல் வேண்டும். பெறுகைகள் வைப்புத் தொகையை செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் பிரதியை பெறுகைப் பத்திரத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். சகல முத்திரை இடப்பட்ட பெறுகைகளும் 19.11.2024 பி.ப 3.30 மணிவரை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

9. தொழிற்சட்டங்கள்
ETF, EPF பங்களிப்புக்கள் உட்பட தொழிற்திணைக்கள நடைமுறைகளுக்கு இணங்கி செயற்படல் வேண்டும்.

10. பெறுகைகள் திறத்தல் மற்றும் தீர்மானம்
பெறுகை நேரம் முடிவடைந்தவுடன் பெறுகைப்பத்திரங்கள் 19.11.2024 பி.ப 3.30 மணிக்கு திறக்கப்படும். விண்ணப்பதாரரோ அல்லது எழுத்து மூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ பெறுகைகள் திறக்கும் போது சமூகமளிக்கலாம். பெறுகை நிபந்தனைகளுக்கு அமைவாக அனுப்பப்படாத ஆவணங்களும் பூரணமாக நிரப்பப்படாத நடைமுறை விலைகளுடன் ஒவ்வாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். மேற்படி பெறுகை கோரல்களை இரத்து செய்யவோ, நிறுத்தி வைக்கவோ, பகுதியாக வழங்குவதற்காகவோ, புதிதாக கோருவதற்கோ வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்கு பூரண அதிகாரமுண்டு. பெறுகை தொடர்பான பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். மேலதிக விபரங்களை 024-2225737 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

செயலாளர்
வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை
வவுனியா
28.10.2024

## சுற்றுலாப் பயணிகளின் வருகையில் வீழ்ச்சியில்லை

கொழும்பு, ஒக்.29

அறுகம்பே சுற்றுலா வலயத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் வீழ்ச்சி ஏற்படவில்லை என்று அந்தப் பகுதி சுற்றுலாத்துறைசார் சார்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது பருவகாலம் இல்லை என்பதால் சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்துள்ளது என்று தெரிவித்துள்ள அவர்கள், இது வழமையானது என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

சுற்றுலா வலயத்தில் பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்படலாம் என்ற சமீபத்திய தகவல் அந்தப் பகுதி பொதுமக்களின் வாழ்க்கையை பாதிக்கவில்லை என்றும், அந்தப் பகுதியில் மீன்பிடித் தொழில் வழமைக்குத் திரும்பியுள்ளது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, அந்தப் பகுதியில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று அம்பாறை பிரதேச பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம்.என். ஜெயபத்ம தெரிவித்துள்ளார். (ஏ-இ)



ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான சித்திரப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்ற யாழ். மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலையின் தரம் -5 மாணவன் க.கஜிஷாந் வெண்கல விருதைப் பெற்றுக்கொண்டார்.

இந்தப் போட்டி யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. (ச-45-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசளிப்பு விழா

காங்கேசன்துறை நடேஸ்வரா கல்லூரியின் 2024ஆம் ஆண்டு பரிசளிப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெற உள்ளது. பாடசாலை மண்டபத்தில் இன்று பி.பகல் 1 மணிக்கு பாடசாலை அதிபர் பா.பாலகுமார் தலைமையில் இடம்பெறும் பரிசளிப்பு விழாவில் நடேஸ்வரா கல்லூரி பழைய மாணவர் நடேஸ்வரன் சிவராஜா துமிலன் பிரதம விருந்தினராகவும், உதவிக் கல்விப் பணிப்பாளர் சிவலிங்கம் புஸ்பகாந்தன் சிறப்பு விருந்தினராகவும், கல்லூரி ஸ்தாபகர் குடும்பத்தைச் சேர்ந்த கணேசன் தம்பிப்பிள்ளை கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்க உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-100)

## தேசத்துரோகிக்கே...

உயிர்த்தஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் 'சனல் 4' ஊடகம் வெளியிட்ட காணொலி தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட இமாம் குழுவின் அறிக்கையை, இணைப்புகள் சகிதம் கம்மன்பில நேற்று வெளியிட்டார். இதன்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

கம்மன்பில மேலும் தெரிவித்ததாவது:-

'சனல் 4 காணொலியின்போது எமது நாட்டு புலனாய்வுப் பிரிவு மீது அஸாட் மௌலானா என்பவர் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார். அவர், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் புலனாய்வு பிரிவினர் ஸஹ்ரான் தலைமையிலான தற்கொலைதாரிகள் குழுவுடன் மூன்று மணிநேரம் கலந்துரையாடினார்கள் என்று குற்றஞ்சாட்டியுள்ளார். எனினும், ஸஹ்ரான் குழுவுக்கும், அஸாட் மௌலானாவுக்கும் இடையில்தான் தொடர்பு இருந்துள்ளது. அதனால்தான் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துக்குப் பின்னர் வெளிநாடு செல்வதற்கு மௌலானா முற்பட்டுள்ளார்.

சனல் 4 முன்னிலையில் மௌலான பொய்யுரைத்துள்ளார். சுவிட்ஸர்லாந்தில் குடியுரிமை பெறுவதற்காகவே அவர் இவ்வாறு செயற்பட்டுள்ளார் என அறிக்கையில்சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. முகத்தை மூடிக்கொண்டு, குரலையும் மாற்றிக்கொண்டு தன்னை ஓய்வு பெற்ற அரச அதிகாரியெனக் கூறிக்கொண்டு கருத்துகளை முன்வைத்த நபர் யார்? அவர் பொலிஸில் இருந்தவர் எனக் கூறப்படுகின்றது. இவர் சி.ஐ.டி.யில் இருந்த பிரதானி எனவும் சொல்லப்படுகின்றது. இது ஊகம் மாத்திரமே, அதனால் பெயரை வெளியிடமாட்டேன். பயங்கரவாதிகளுடன் புலனாய்வுப் பிரிவுக்கு நிச்சயம் தொடர்பு இருக்க வேண்டும். அப்போதுதான் பயங்கரவாதிகளின் திட்டத்தை அறிந்துகொள்ள முடியும். ஸஹ்ரான் தொடர்பில் புலனாய்வு பிரிவினரால் உரிய தரப்புகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஸஹ்ரான் குழுவுடன் தொடர்பு இருந்ததால்தான் தகவல்களை திரட்டிக்கொள்ளக்கூடியதாக இருந்துள்ளது.

இமாம் குழு முன்னிலையில் சாட்சியளிக்குமாறு சனல் 4 ஊடகத்திற்கும், மனித உரிமைகள் பேரவைக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. இரு தரப்புகளும் அந்த அழைப்பை நிராகரித்துள்ளன. குற்றச்சாட்டை சுரேஸ் சலே நிராகரித் தார். சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவித்தார். இதனையடுத்து இணையத்திலிருந்து சனல் 4 காணொலியை எடுத்துவிட்டது. சனல் 4 காணொலி தொடர்பில் விசாரணை வேண்டும் என தேசிய மக்கள் சக்தி அன்று வலியுறுத்தியது. இன்று உண்மை தெரிந்துவிடும் என்பதாலேயே அறிக்கை வெளியிடப்படாமல் இருக்கக்கூடும். ஜனாதிபதி அறிக்கை வெளியிடாதால்தான் நாம் வெளியிட்டோம். முதலாவது அறிக்கையில் நாம் இணைப்புகளை வெளியிடவில்லை. தேசிய பாதுகாப்பு கருதி அதனை செய்யவில்லை. எனினும், இமாம் அறிக்கையில் உள்ள இணைப்புகளையும் வெளியிட்டுள்ளோம் - என்றார். (அ-ம-44)

## மீண்டும்...

மாகியுள்ளது. கொழும்பு கோட்டையிலிருந்து நேற்று அதிகாலை 5.45 மணிக்கு ரயில் புறப்பட்டு நேற்று மதியம் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது. இன்று காங்கேசன்துறையிலிருந்து மு.ப. 10.30 மணிக்கு புறப்பட்டு 10.53 இற்கு யாழ்ப்பாணம் பிரதான ரயில் நிலையத்தை வந்தடைந்து, 11 மணிக்கு கொழும்பு நோக்கி புறப்படும். வடக்கு ரயில் பாதையில் தினமும் ரயில் பயணிக்கும் என்றும், ரயில் கடவைகளைப் பயன்படுத்தும் பொதுமக்கள் மிகவும் அவதானமாக செயற்படுமாறும் ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ-ஓ-27)

## அமெரிக்கா...

வித்ததாவது:-

அறுகம்பே பகுதியில் பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்பட சாத்தியங்கள் உள்ளதாக எமக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் இலங்கை அரசாங்கத்துக்கு எச்சரிக்கைகளை விடுத்தோம். அதற்கு அவர்கள் மிக விரைவாகப் பதிலளித்து நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர்.

ஆனால் அமெரிக்கா தன் மக்களுக்கு எந்தவொரு பயணத் தடைகளையும் விடுக்கவில்லை. மாறாக இலங்கைக்கு வரும்போதும், இலங்கையிலும் அவதானத்துடன் இருக்குமாறு மட்டுமே தெரிவித்தோம். இலங்கைக்கான பயண ஆலோசனை தொடர்பான சில பிழையான தகவல்கள் வெளியாகும் நிலையில் அவற்றைத் தெளிவுபடுத்த வேண்டிய தேவை உள்ளது. அதன் அடிப்படையில் இந்தக் கருத்துகளைப் பகிர்கின்றேன் - என்றார். (அ-ம-இ)

## பொதுத்தேர்தலுக்கு...

இந்தத் தேர்தலில் ஒரு கோடியே 74 இலட்சத்து 30 ஆயிரத்து 354 பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளனர்.

கூடுதலான வாக்காளர் எண்ணிக்கையைக் கொண்ட மாவட்டங்களான கொழும்பில் 1.76 மில்லியன் வாக்காளர்களுக்கு ஆயிரத்து 204 வாக்களிப்பு நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. 1.88 மில்லியன் வாக்காளர்களை கொண்ட கம்பஹா மாவட்டத்தில் ஆயிரத்து 212 வாக்களிப்பு நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. ஆகக்குறைந்த வாக்காளர் எண்ணிக்கையைக் கொண்ட மன்னார் மாவட்டத்தில் 90 ஆயிரத்து 607 வாக்காளர்களுக்கு 108 வாக்களிப்பு நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. 2 ஆயிரத்து 34 வாக்கெண்ணும் நிலையங்களில் வாக்குகள் எண்ணப்படவுள்ளன. (அ-ஓ-6)


## கேள்வி அறிவித்தல்
## மேலதிக முத்திரைத் தீர்வை 2023 -கட்டம் 2
## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

1. வலி தெற்கு பிரதேச சபை சார்பாக உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழுவின் தலைவர் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக்கேள்விகளைக் கோருகின்றார்கள்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் மூலம் நடாத்தப்படும்.
3. விலைக்கேள்வியாளர்கள். நிர்மாணத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு பெற்ற கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் Schedule (பகுதி 5) இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. (SBD -03)
5. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்கள் கீழே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன் அம் முகவரியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.
6. ஆர்வமுள்ள விலைக்கேள்வியாளர்கள் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை செயலாளர். வலி தெற்கு பிரதேச சபை. சுன்னாகம் (தொலைபேசி இல: 021-2240017, தொலைநகல் 021-2240327) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை 2024.10.29 தொடக்கம் 2024.11.11 வரையான காலப்பகுதியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரையில் சமர்ப்பித்து ரூ. 3,500.00 மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் (மூலம். பிரதி) 2024.11.12ந் திகதி 10.30 மணிக்கு முன்னர் தலைவர். உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு. வலி தெற்கு பிரதேச சபை. சுன்னாகம் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள். அவைகளை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
8. விலைக்கேள்விக்கு முன்னரான கூட்டம் மேலே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் மு.ப 10.30 மணிக்கு 2024.11.05 அன்று நடைபெறும்
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| இல | கேள்வி அடையாள இல | வேலைவிபரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (ரூ.மில்லியன்) | ஒப்பந்த காலம் (நாட்கள்) | தேவையான தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் | | கேள்விப் பிணைவிபரம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | காலம் (நாட்கள்) | திகதி | தொகை (ரு) | தேவைப்படும் காலம் |
| 01. | NP/14/41(15)/02 /05/Stampduty/ 2024/03 | கொலன்காமம் 2ம் குறுக்கு வீதி புனரமைத்தல், சங்குவேலி | 3.15 | 60 | C7 and C8 (வீதிகள்) | 63 | 14.01.2025 | 31,500.00 | 11.02.2025 வரை |
| 02. | NP/14/41(15)/02 /05/Stampduty/ 2024/04 | வைரவர் கோவில் வீதி புனரமைத்தல் (கட்டம் 1), சுன்னாகம் கிழக்கு | 1.66 | 45 | C8 and C9 (வீதிகள்) | 49 | 31.12.2024 | 17,000.00 | 28.01.2025 வரை |

"விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும். இக் கொள்வனவின் மூலம் நடாத்தப்படும் வேலைக்கான மதிப்பீட்டுத்தொகை (VATமற்றும் வேறுவரிகள்) 50மில்லியனினுள் இருப்பின், பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை என்பன பொதுநிதிச் சுற்றறிக்கை இல 04/2016(iii) பின்பற்றப்படும்".

தலைவர்
உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு,
வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.
29.10.2024

(cr.41586) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைமை மீட்புக்கான என் பயணம் தொடரும்

## சிறீதரன் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஒக்.29**

**ஈழத்தமிழர்களின் இறைமை மீட்புக்கான அரசியற் போரில், ஏகோபித்த தலைமைத்துவத்தின் கீழ் தமிழ்த்தேசியக் கட்சிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்துப் பயணிப்பதற்கான எத்தனங்களை மேற்கொள்வேன் என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி செல்வாநகர் வட்டாரத்தில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் செயற்பாட்டாளர்களை சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு உள்ளும் புறமுமாய் ஏற்பட்டுள்ள பிளவுகள், எமது மக்களிடையே பலத்த அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. அதனால் எமது மக்கள் அரசியல் வெறுமைக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இந்த நிலை மாறவேண்டுமானால், தமிழ்த்தேசியத் தளத்தில் இயங்கும் கட்சிகளும், அதன் தலைமைகளும் ஓரணியில் இணைய வேண்டிய காலத்தேவை எழுந்துள்ளது.

கொள்கைரீதியான உடன்பாடுகளின் அடிப்படையில்முறைமைப்படுத்தப்பட்ட இணக்க நிலையை உருவாக்கவும், அதன்வழி ஈழத்தமிழர்களின் அரசியல்வெளியில் காத்திரமான தலைமைத்துவத்தை உருவாக்கவும் தொடர்ந்தும் உழைப்பேன் - என்றார். (ச-26)



## மின் கட்டணத்தை குறைக்க ஆணைக்குழுவிடம் யோசனை

கொழும்பு, ஒக்.29

மின்சாரக் கட்டணத்தை நூற்றுக்கு 411 இடையிலான வீதத்தால் குறைக்க இலங்கை மின்சாரசபை இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் யோசனையொன்றை முன்வைத்துள்ளது.

இது தொடர்பில் ஆராய்ந்த பின்னர் அதனை செயற்படுத்த குறைந்தது ஒரு மாத காலம் எடுக்கும் எனவும் அதன்படி, மின் கட்டணத் திருத்தம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் இரண்டாவது வாரத்தில் இடம்பெறும் எனவும், தற்போதைய திட்டத்தை நிறுத்தி அதனை ஒரு வருடத்தில் இருமுறை மாத்திரம் நடைமுறைப்படுத்த இலங்கை மின்சாரசபை கோரிக்கை விடுத்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-45)



## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக்.29

ஊரெழு கணேச வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் ஊரெழு என்.கே.மண்டப உரிமையாளரின் அனுசரணையுடன் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில்(2023) சிறந்த பெறுபேற்றைப் பெற்ற முதலாவது மாணவி அபிஷா மரியதாஸுக்கு துவிச்சக்கரவண்டி வழங்கிவைக்கப்பட்டதுடன், இரண்டாவது மாணவி விபூசனா ஸ்ரீரங்கனுக்கு ரூபா பத்தாயிரம் இரத்தினகுமார் நிரஞ்சனா தம்பதியின் அனுசரணையில் வழங்கப்பட்டது. (ச-45)

## கரவை அபிவிருத்தி ஒன்றிய தலைவர் காலமானார்



வடமராட்சி கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் உபாலி எஸ்.பொன்னம்பலம் (வயது - 84) சில நாட்கள் சுகவீனத்துக்கு பின்னர் நேற்று திங்கட்கிழமை பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் காலமானார்.

கொழும்பில் உபாலி குழுமத்தில் பல உயர்பதவிகளை வகித்த அவர் சொந்த ஊரில் உபாலி பொன்னம்பலம் என்றே அழைக்கப்பட்டு வந்தார். பதவியில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர் கரவெட்டியில் சமூக சேவைகளை முன்னெடுப்பதற் காக கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தை பல வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்து அவர் முன்னெடுத்த பல அபிவிருத்தி திட்டங்கள் அந்த கிராமத்தின் நிலக்காட்சியையே மாற்றிமைத்தது. உபாலி பொன்னம்பலம் கரவை விக்னேஸ்வரா கல்லூரியின் பழைய மாணவர்கள் சங்க கொழும்பு கிளையின் தாபகர்களில் ஒருவர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

அவரது இறுதிச்சடங்கு இன்று காலை பத்து மணியளவில் கரவெட்டியில் இடம்பெறுகிறது. (ஒ-இ)

## குளிர்காலத்தில் 68,000 ரஷ்யர்கள்

குளிர்காலத்தில் 68 ஆயிரம் ரஷ்ய சுற்றுலாப் பயணிகளை மத்தலவுக்கு அழைத்துவரும் திட்டம் நேற்றுமுதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ரஷ்யாவின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தலைமையில் முதல்கட்டமாக 410 ரஷ்யப் பயணிகள் நாட்டுக்கு வருவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. ரெட் விங்ஸ் விமானம் ஊடாக மொஸ்கோவில் இருந்து இவர்கள் மத்தல விமான நிலையத்துக்கு அழைத்து வரப்படவுள்ளனர். (எ-இ)

## 11ஆவது நிறைவு விழாவும் தீபாவளிக்கொண்டாட்டமும்

யாழ்ப்பாணம், ஒக்.29

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 11 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், வாலிபத் தீபாவளிக் கொண்டாட்டமும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் நாளைமறுதினம் வியாழக்கிழமை பி.ப. 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் கலை கலாசார நிகழ்வுகள், நடன நிகழ்வுகள், பிரபல மாயாஜால வித்தகரின் மாயாஜால வித்தைகளின் காட்சி, இலங்கையின் பல பாகங்களிலிருந்து இணையும் முன்னணிக் கலைஞர்களின் கலக்கலான இசை நிகழ்ச்சி, வான வேடிக்கைகள் மற்றும் கலைநிகழ்வுகள் போன்றன நடைபெறவுள்ளன. இந்த நிகழ்வுகளுக்கான அனுமதி முற்றிலும் இலவசமென நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ரி-66)



## ஞானச்சுடர் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக்.29

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் ஞானச்சுடர் சஞ்சிகையின் 322 ஆவது ஐப்பசிமாத இதழ் வெளியீட்டு நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மு.ப 10.45 மணிக்கு நடைபெற்றது. நிகழ்வில் வில்லிசை மாமணி க.சத்தியதாஸ் சஞ்சிகையின் வெளியீட்டுரையையும், வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் சைவப்புலவர் கந்த சத்தியதாசன் மதிப்பீட்டுரையையும் நிகழ்த்தினர். (ச-45-66)

## கந்தசஷ்டி உற்சவம்

யாழ்ப்பாணம், ஒக்.29

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த கந்தசஷ்டி உற்சவம் தேவஸ்தான பிரதம குருக்கள் இராஜேந்திர சுவாமிநாதக்குருக்கள் தலைமையில் எதிர்வரும் 02ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் 9ஆம் திகதி சனிக்கிழமைவரை இடம்பெறவுள்ளது.

2ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றமும், 7ஆம் திகதி வியாழக்கிழமை சூரசங்ஹார உற்சவமும், 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவமும், 9ஆம் திகதி சனிக்கிழமை திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறவுள்ளதுடன், தினமும் மு.ப 11 மணிக்கு சூரபன்மன் வதைப்பலம் படிப்பு இடம்பெறவுள்ளது என தெரிவிக்கப்பட்டது. (எ-ரி)

பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
அமெரிக்க லொத்தர் இலவச விசா
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
2026ல் நீங்களும் அமெரிக்காவில்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
V2 Travels
0768226244

விற்பனைக்குண்டு
யூரியா மலிவு விற்பனை
விலை ரூ. 8000/-
ABI Farm, செல்வபுரம், பளை
தொடர்பு: 077 184 4378

காசாளர் தேவை
K.K.S வீதி, இனுவிலில் இயங்கும் பிரியாணிக் கடைக்கு காசாளர் தேவை (ஆண்/பெண்)
வயது-19-35 / வேலைநேரம்: 9 am- 6 pm
சம்பளம்-30 000/-
தொடர்புகளுக்கு: 077 991 2628

வேலைக்கு ஆட்கள் தேவை
Store Keeper வேலைக்கு ஆட்கள் தேவை
தொடர்புகளுக்கு:
076 760 0403



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.